


விலை
ரூபா 40
பக்கங்கள் - 12
# ஒருவன்
ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 48 குரோதி வருடம் மார்கழி மாதம்
01 ஆம் திகதி திங்கட்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 14 (16.12.2024)




## டில்லி - கொழும்பு உறவு மேலும் வலுவடையும்

# அநுரவின் இந்திய பயணம் முதலீடுகளை அதிகரிக்கும்!



( ஆர். மனோசங்கர் )

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மூன்று நாள் அரச பயணமாக இந்தியா சென்றுள்ளார். கடந்த செப்டம்பர் மாதம் பதவியேற்றுக் கொண்டதன் பின்னர்அவர் மேற்கொள்ளும் முதல் அரச பயணம் இது வாகும். இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவின் அழைப்பின் பேரில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 17ஆம் திகதி வரையும் இந்தியாவில் தங்கியிருப்பார் என இலங்கை வெளியறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திபிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்டோரும் அநுரவுடன் சென்றுள்ளனர்.

இப் பயணம் இந்திய – இலங்கை உறவுகளில் ஒரு முக்கிய தருணத்தைக் குறிப்பதுடன், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் இருதரப்பு ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கான (தொடர்ச்சி...) 02

## அரிசிக்கான சுங்க வரி குறைக்கப்பட வேண்டும்

இறக்குமதியாளர் சங்கம்



(கனூஷியா புஷ்பகுமார்)

அரிசிக்கு விதிக்கப்பட்டுள்ள 65 ரூபாய் சுங்க வரியை 50 ரூபாவாக குறைப்பதால் அரிசி ஒரு கிலோவை 220 ரூபாய் சில்லறை வில்லைக்கு விற்பனை செய்ய முடி யும் என ஜனாதிபதி முன்னிலையில் தெரிவித்ததாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

இறக்குமதியாளர்கள் பெரிய அளவிலான மொத்த விற்பனையாளர்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிக்கும் நிலையில் அவர்கள் அதனை சிறிய அளவிலான மொத்த விற்பனையாளர்களுக்கு விநியோகித்து வருகின்றனர். சிறிய மொத்த (தொடர்ச்சி...) 02

## மாடிக் குடியிருப்பில் போதைப்பொருள் விநியோகம்

வெள்ளவத்தையில் மூவர் கைது

வெள்ளவத்தை, கொலிங்வூட் பிளேஸ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கொக்கெய்ன் மற்றும் குஷ் ரக போதைப்பொருளுடன் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 36 கிராம் கொக்கெய்ன் (தொடர்ச்சி...) 02

## பதில் அமைச்சர்கள் ஐவர் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதன் காரணமாக 05 அமைச்சுகளுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, ஜனாதிபதியின் கீழ் காணப்படும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல்,பொருளாதார அபிவிருத்தி (தொடர்ச்சி...) 02

## புதிய சபாநாயகர் நாளை தெரிவு

மூன்று பேரின் பெயர்கள் முன்மொழிவு



( எஸ்.நிஷாந்தன் )

சபாநாயகர் பதவியிலிருந்து தாம் விலகுவதாக அசோக ரன்வல அறிவித்ததையடுத்து புதிய சபாநாயகர் தெரிவு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

புதிய சபாநாயகரை அடுத்த நாடாளுமன்ற அமர்வின் முதல் நாளில் தெரிவு செய்ய வேண்டும் என நாடாளுமன்ற பிரதி பொதுச்செயலாளர் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார். அதன்படி நாளை புதிய சபாநா யகர் தெரிவு இடம்பெறவுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ள சபாநாயகர் தொடர்பில் சர்ச்சை எழுந்தால் அன்றைய தினம் வாக்கெடுப்பு நடத்தப்படும் என அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புதிய சபாநாயகர் பதவிக்கு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன என அரச தரப்புச் (தொடர்ச்சி...) 02

## ஏப்ரலில் உள்ளூராட்சி தேர்தல் செப்டம்பரில் மாகாண சபை!

அரசாங்கம் தீர்மானம்

( எஸ்.நிஷாந்தன் )

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும், செப்டம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தலையும் நடத்த ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அடுத்த வருடம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கான திகதிகளை அரசாங்கம் தீர்மானித்துள்ளது என நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களைக் கோரும் வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏப்ரல் மாத தொடக்கத்தில் நட த்தவும், (தொடர்ச்சி...) 02

### இஸ்ரேலில் விசா விதிமுறைகளை மீறிய

## 17 இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டனர்

( பாலகணேஷ் டிலுக்ஷா)



இஸ்ரேலில் 17 இலங்கைப் பிரஜைகள், அவர்களது வேலை ஒப்பந்தங்களை மீறியதற்காக இலங்கைக்கு திருப்பியனுப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். நாட்டுக்கு திருப்பினுப்பப்பட்ட (தொடர்ச்சி...) 02

## புதிய சபாநாயகர் தெரிவுக்கு எதிர்க்கட்சியும் பரிந்துரை

( பாலகணேஷ் டிலுக்ஷா )



கடந்த வாரம் அசோக ரன்வல சபாநாயகர் பதவியிலிருந்து விலகிய நிலையில் பதவி வெற்றிடத்திற்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை பரிந்துரைக்கத் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் (தொடர்ச்சி...) 02

### இறக்குமதி செய்யப்பட்ட

## முதலாவது அரிசித் தொகுதி இன்று வருகிறது

கடைகளில் மக்கள் நீண்ட வரிசை

அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட முதலாவது அரிசி தொகுதி இன்று திங்கட்கிழமை நாட்டிற்கு கிடைக்கப்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி முதல் அரிசியை இறக்குமதி செய்யத் தனியார்த் துறைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கிய நிலையில், 2,400 மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள தாகச் சுங்கத் திணைக்களம் (தொடர்ச்சி...) 02

## சிரியாவிலிருந்து இராணுவத்தை மீளப் பெறும் ரஷ்யா



( ஆர்.மனோசங்கர் )

வடக்கு சிரியாவின் முன்னணிப் பகுதிகளிலிருந்தும், அலவைட் மலைகளில் உள்ள நிலைகளிலிருந்தும் தனது இராணுவத்தை ரஷ்யா மீளப் பெறவுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன. எனினும்,ஜனாதிபதிபஷர்அல்–அசாத்தின் (தொடர்ச்சி...) 02

## மன்னார் மறைமாவட்ட ஆயராக ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவு

( வாஸ் கூஞ்ஞ )



அருட்தந்தை ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை அடிகளார் மன்னார் மறை மாவட்டத்தின் 4வது ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகையால் தெரிவுசெய்ய ப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றிய வர்களிலிருந்து

தெரிவான முதல் ஆயராக அவர் அபிசேகம் செய்யப்பட உள்ளார். திருத்தந்தையின் இந்நியமன செய்தி மன்னார் புனித செபஸதியார் (தொடர்ச்சி...) 02

### அநுரவின் அடுத்த பயணம்

## அமெரிக்காவா? சீனாவா?

இந்தியாவுக்கு பயணம் செய்துள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அடுத்த வெளிநாட்டு பயணமாக அமெரிக்கா பயணமாகவுள்ளதாக தெரியவருகிறது. நேற்று ஞாயிற்றுக்கிழமை டில்லிக்கு சென்ற பின்னர், அங்கு நடைபெற்ற தொடர்ச்சி...) 02

# புகையிலையை விடத் தீங்கு விளைவிக்கும் உணவுப் பொருட்கள் சந்தையில் விற்பனை

## பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

புகைபிடிப்பதால் ஏற்படும் தீமைகளை விடப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் உணவுப் பொருட்கள் சந்தையில் இருப்பதாகவும் சில உற்பத்தியாளர்கள் அவற்றை விளம்பரப்படுத்த சிறுவர்களைப் பயன்படுத்துவதாகவும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் அடங்கிய பொருட்களைச் சந்தைக்கு வெளியிடும் வர்த்தகர்கள், தமது பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நாட்டில் ஆட்கள் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் இதன் தாக்கத்தைக் குறைக்க அடுத்த வருடத் தொடக்கத்திலிருந்து பல நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி,

மக்கள் உண்ணும் உணவு தொடர்பாக அரசு குறிப்பிட்ட பொறுப்பை ஏற்க வேண்டும். கடந்த காலங்களில் இந்தப் பொறுப்பு சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சின் வேலை என்று சுட்டிக்காட்டி உரிய பொறுப்பை முன்னும் பின்னுமாக மாற்றும் முயற்சிகளை நாம் பார்த்தோம்.

12 வயதுக்குட்பட்ட குழந்தைகளை உணவு விளம்பரங்களில் நேரடியாக உடல் நலத்தைப் பாதிக்கும் வகையில் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க சட்டம் அவசரமாகத் தேவை. அதிக அளவு இரசாயனங்கள் அடங்கிய உணவுப் பொருட்களைப் பயன்படுத்துவதே இன்று இருக்கும் பல நோய்களுக்குக் காரணம் என்று சோதனைகள் உறுதி செய்துள்ளன.

## கார்த்திகை தீப நாள் கொண்டாட்டம்





( மூதூர் நிருபர் புஹாரி)

கார்த்திகை விளக்கீடு தினமான நேற்று முன்தினம் சனிக்கிழமை திருகோணமலை பகுதியிலுள்ள வீடுகளில் தீபங்கள் ஏற்றப்பட்டு கார்த்திகை தீப நாள் கொண்டாடப்பட்டதை காணக் கூடியதாக இருந்தது.

### இறக்குமதி..

தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அரிசி தொகை சுகாதாரத் திணைக்களத்தின் தரப் பரிசோதனையின் பின்னர் விடுக்கப்படும் எனச் சுங்கத் திணைக்களப் பேச்சாளர் மேலதிக பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் அரிசித்தட்டுப்பாட்டால் கடைகளில் மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்பதை நேற்று அவதானிக்க கூடியதாக இருந்தது.

அண்மைய நாட்களாக அரிசிக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட நேர வரிசையில் நிற்க வேண்டியுள்ளதால் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர். இதேவேளை, தனியார் இறக்குமதியாளர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 75,000 கிலோகிராம் அரிசி பாவனைக்கு உகந்ததல்ல என்பதால் தெளிவற்ற விபரங்கள் காரணமாகச் சுங்கத்திலிருந்து விடுவிக்காதிருக்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த அரிசியை மீள் ஏற்றுமதி செய்யுமாறு சுங்கத் திணைக்களம் தொடர்புடைய இறக்குமதியாளர்களுக்கு அறிவித்துள்ளது.

கையிருப்பில் உள்ள பாவனைக்கு உகந்ததல்ல என அறியப்பட்ட அரிசியை மீள் ஏற்றுமதி செய்யாவிட்டால் பறிமுதல் செய்து அழிக்கப்படும் என இறக்குமதியாளர்களுக்குச் சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

### புதிய சபாநாயகர்...

இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் மீண்டும் கூடவுள்ள நிலையில், முதலாவது நிகழ்வாக புதிய சபாநாயகர் தேர்வு இடம்பெறவுள்ளது.இதன்போது சபாநாயகர் பதவிக்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பரிந்துரைக்கவுள்ளோம்.

எதிர்க்கட்சியிலிருந்து ஒருவரை தெரிவு செய்யமுடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனாலும் வேட்பாளர்களை ஒப்பிடும் சூழ்நிலையை மக்களுக்கு உருவாக்குவோம் என்று நம்புகிறோம்.

நவம்பர் மாதம் 21ஆம் திகதி நாங்கள் அந்தப் பதவிக்கு போட்டியிட்டிருந்தால், பொய்யாகக் கலாநிதி பட்டம் பெற்ற ரன்வலவை விட எதிர்க்கட்சி வேட்பாளர் சிறந்தவராக இருந்திருப்பார் என்று மக்கள் கூறியிருப்பார்கள்" என்றார்.

### புதிய சபாநாயகர்...

செய்திகள் தெரிவிக்கின்றன. பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலி, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிஹால் கலப்பதி, லக்ஷ்மன் நிபுன ஆராச்சி ஆகியோரின் பெயர்களே முன்மொழியப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை எனவும், இன்று திங்கட்கிழமை இறுதி முடிவெடுக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

### பதில் அமைச்சர்கள்...

அமைச்சு ஆகிய 03 அமைச்சுகளுக்கும், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு ஆகியவற்றுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதில் டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக, டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்ன நியமிக்கப்பட்டுள்ளதுடன் பதில் பாதுகாப்பு அமைச்சராக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி மற்றும் திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ந

### மன்னார்...

பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கென ஒழுங்குபடுத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் உத்தியோகபூர்வமாக சனிக்கிழமை (14) மாலை வாசிக்கப்பட்டது. இதன்போது மன்னார் மறைவாட்டத்திலுள்ள ஆலயங்களின் மணிகள் ஒலிக்கப்பட்டு இறைமக்களுக்கும் இச்செய்தி அறிவிக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்டம் ஆரம்பிக்கப்பட்டு 43 வருடங்கள் கடந்து செல்லும் இந்நிலையில் இம்மன்னார் மறை மாவட்டத்திற்கு மூன்று ஆயர்கள் வெளி மறைமாவட்டங்களில் இருந்தே நியமனம் பெற்றிருந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே புதிய ஆயராக நியமனம் பெற்ற அருட்தந்தை ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை அடிகளார் மன்னார் மறைமாவட்ட குருக்களிலிருந்து நியமனம் பெற்ற முதலாவது ஆயராவார்.

### அநுரவின்...

உயர்மட்ட சந்திப்பில் அமெரிக்க பயணம் தொடர்பாக தகவல்கள் கசிந்துள்ளன. ஆனால் அநுரவின் வெளிநாட்டு பயண நிகழ்ச்சி நிரலில் சீனாவும் உள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

### அரிசிக்கான...

விற்பனையாளர்கள் அதனை சில்லறை விற்பனையாளர்களுக்கு விநியோகிக்கிறார்கள். இந்த விநியோக வலையமைப்பில் போக்குவரத்து கட்டணம், ஏற்றுதல் மற்றும் இறக்குதல், வாடகை போன்ற இதர செலவுகளுக்கு 8 வீதம் முதல் 10 வீதம் வரையிலான தொகை செலவிடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், "அரிசியை இறக்குமதி செய்வதற்குத் தனியார் துறைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கிய போதிலும் அதற்கு இரண்டு வார கால அவகாசம் மாத்திரமே வழங்கப்பட்டது.

இவ்வளவு குறுகிய காலத்தில் தமிழகத்தின் தென்பகுதி துறைமுகங்களிலிருந்துதான் அரிசியை இறக்குமதி செய்ய முடியும்.

குறுகிய காலப்பகுதியில் அரிசியை இறக்குமதி செய்யும் போது சாதாரண விலையை விட அதிக விலை செலுத்த நேரிடும். இந்தியாவின் வடபகுதியிலிருந்து இறக்குமதி செய்தால் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யலாம்." எனத் தெரிவித்தார்.

கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை வரை சுமார் 440 மெட்ரிக் டொன் நாட்டு அரிசி கொழும்பு துறைமுகத்திலிருந்து தரையிறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சிரியாவிலிருந்து...

வீழ்ச்சிக்குப் பிறகு சிரியாவில் உள்ள அதன் இரண்டு முக்கிய தளங்களை விட்டு வெளியேறவில்லை என்று நான்கு சிரிய அதிகாரிகள் ரொய்ட்டர்ஸ் சர்வதேச செய்திச் சேவையிடம் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ரசியாவுடன் நெருங்கிய கூட்டணியை உருவாக்கிய ஆசாத்தின் ஆட்சிக்கவிழ்ப்பு, ரசியாவின் தளங்களான லடாகியாவில் உள்ள ஹ்மெய்மிம் விமானத் தளம் மற்றும் டார்டஸ் கடற்படை தளத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

வெள்ளிக்கிழமை செயற்கைக்கோள் காட்சிகள், ஹ்மெய்மிம் தளத்தில், திறந்த நிலையில், ஏற்றத் தயாராகி வரும் நிலையில், குறைந்தது இரண்டு அன்டோனோவ் யு௨-124 விமானங்கள் இருப்பதைக் காட்டுகிறது.

சனிக்கிழமை லிபியாவிற்கு குறைந்தது ஒரு சரக்கு விமானம் பறந்ததாக, சிரிய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரசியர்களுடன் தொடர்பு கொண்ட சிரிய இராணுவ மற்றும் பாதுகாப்பு வட்டாரங்கள், மொஸ்கோ தனது படைகளை முன் வரிசைகளில் இருந்து பின்வாங்கி, சில கனரக உபகரணங்களையும் மூத்த சிரிய அதிகாரிகளையும் திரும்பப் பெறுவதாக ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்தன.

ஆனால், நிலைமையின் தீவிரம் காரணமாக பெயர் குறிப்பிட விரும்பாத அந்த வட்டாரங்கள், ரஷ்யா தனது இரண்டு முக்கிய தளங்களிலிருந்து வெளியேறவில்லை என்றும், தற்போது அவ்வாறு செய்யும் எண்ணம் இல்லை என்றும் கூறின.

சில உபகரணங்கள் மொஸ்கோவிற்குத் திருப்பி அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய இடைக்கால நிர்வாகத்திற்கு நெருக்கமான மூத்த கிளர்ச்சி அதிகாரி ஒருவர், சிரியாவில் ரஷ்ய இராணுவ இருப்பு மற்றும் அசாத் அரசாங்கத்திற்கும் மொஸ்கோவிற்கும் இடையிலான கடந்தகால ஒப்பந்தங்கள் பற்றிய பிரச்சினை விவாதிக்கப்படவில்லை என்று ரொய்ட்டர்ஸிடம் கூறினார்.

"இது எதிர்கால பேச்சுவார்த்தைகளுக்கான விஷயம், சிரிய மக்களே இறுதி முடிவை எடுப்பார்கள்" என்று அந்த அதிகாரி கூறினார். "எங்கள் படைகள் இப்போது லடாகியாவில் உள்ள ரஷ்ய தளங்களுக்கு அருகில் உள்ளன," என்று அவர் மேலும் கூறினார்.

தளங்கள் குறித்து சிரியாவின் புதிய ஆட்சியாளர்களுடன் ரஷ்யா விவாதித்து வருவதாக கிரெம்ளின் தெரிவித்துள்ளது.

சிரியாவின் புதிய ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாகவும், ரஷ்யா அதன் தளங்களிலிருந்து விலகவில்லை என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு ரஷ்ய வட்டாரம் தெரிவித்துள்ளது.

### இஸ்ரேலில்...

வர்கள் விவசாய வேலைகளுக்கான தொழில் விசாவில் இஸ்ரேலுக்கு சென்றுள்ளனர். ஆனால் அவர்கள் நியமிக்கப்பட்ட பணியிடங்களை விட்டு வெளியேறிய பின்னர் பேக்கரிகளில் பணிபுரிந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய அதிகாரிகளின் கள கண்காணிப்புகளின் போது அந்நபர்களைத் தடுத்து வைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் ஒப்பந்தங்களை உறுதிப்படுத்த வெளிநாட்டு தொழிலாளர் நடைமுறைகளை இஸ்ரேல் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் வெளிநாட்டு பணியாளர்களை அவர்களது விசா ஒப்பந்தங்களில் குறிப்பிடப்படாத வேலைகளில் இணைவதைத் தடை செய்துள்ளதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு வேலைவாய்ப்பு பெற்று அங்கு வந்த பின்னர் இதுபோன்ற விசா வகை மாற்றங்களுக்கு எந்த சட்ட விதிகளும் இல்லை என இஸ்ரேலிய அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதேபோன்ற ஒரு சம்பவத்தில், ஒரு வருடத்திற்கு முன்னர் இஸ்ரேலுக்கு பராமரிப்பு பணிக்காக சென்ற இலங்கைப் பெண் ஒருவர் தனது வேலை விதிகளை மீறியதற்காக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார். இந்நிலையில் இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவைப் பேணுவதற்கு தொழிலாளர்கள் தமது ஒப்பந்தக் கடமைகளை கடைப்பிடிக்குமாறு இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

### மாடிக்குடியிருப்பு...

மற்றும் 203 கிராம் குஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 18,75,000 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டது. ஐந்து கையடக்கத் தொலைபேசிகள், பணம் எண்ணும் இயந்திரம், இரண்டு வங்கி அட்டைகள் மற்றும் இலத்திரனியல் தராசு என்பனவும் இதன்போது கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் தெஹிவளை, மட்டக்குளி மற்றும் கொழும்பு 14 பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ஏப்ரலில்...

7 ஆண்டுகளுக்கும் மேலாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடம் செப்டம்பர் மாதம் நடத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது.

### அநுரவின்...

பரஸ்பர உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக இலங்கை அரசாங்கம் நம்புகிறது.

இந்தச் சுற்றுப் பயணத்தின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான இருதரப்பு சந்திப்பில் முக்கிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக கூட்டாண்மையை நோக்கமாகக் கொண்ட பொருளாதார ஒத்துழைப்பு, பிராந்திய பாதுகாப்பு மற்றும் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளை உள்ளடக்கியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்தியாவின் துணை ஜனாதிபதி ஸ்ரீ ஜக்தீப் தன்கர், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இந்திய சுகாதார அமைச்சர் ஜே.பி.நந்தா, இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவல் உள்ளிட்ட இராஜதந்திரிகள் பலருடனும் கலந்துரையாடவுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையில் முதலீடு மற்றும் வணிகம் தொடர்புகளை பலப்படுத்தும் நோக்கில் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் முதலீட்டாளர்களுடனான சந்திப்பிலும் ஜனாதிபதி அநுர கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும், இரு நாடுகளின் பகிரப்பட்ட கலாசார மற்றும் மத பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் ஆழ்ந்த ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த தளமான புத்தகாயாவிற்கும் ஜனாதிபதி பயணம் செய்வார்.

**மூலோபாய சூழல்**

இந்தியாவின் "அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை" கொள்கையிலும், பிரதமர் மோடியின் பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்ற (SAGAR) தொலைநோக்குப் பார்வையிலும் இலங்கை ஒரு மைய இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இந்தியாவின் மிக நெருக்கமான கடல்சார் அயல் நாடான இலங்கையின் நிலைத்தன்மை மற்றும் செழிப்பு பிராந்திய பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்தவை.

இந்திய நாடுகளுக்கு இடையேயான சமீபத்திய உயர் மட்ட பரிமாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு இப்பயணம் அமைந்துள்ளது.

கடந்த ஒக்டோபரில், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது, எரிசக்தி உற்பத்தி மற்றும் பரிமாற்றம், மதத் தலங்கள் சூரிய மின்மயமாக்கல், எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகம் மற்றும் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு குறித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இந்த முயற்சிகள் இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மையை வலுப்படுத்துவதையும் புதிய வருவாய் வழிகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவின் வலுவான ஆதரவு முக்கியமானது.

புது டில்லியின் நிதி உத்தரவாதங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியை எளிதாக்கியதுடன், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு மிகவும் தேவையான நிவாரணத்தை வழங்கியது.

**சுற்றுலாத்துறை குறித்து அதீத கவனம்**

ஜுலை 2023 இல் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்தின் போது, இரு நாடுகளும் கடல்சார், வான்வழி, எரிசக்தி, வர்த்தகம் மற்றும் மக்களிடையேயான இணைப்புக்கான திட்டமொன்னை ஏற்றுக்கொண்டன.

இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலா துறை ஒரு முக்கிய அங்கமாக மாறியுள்ளது.

இந்நிலையில், இலங்கைக்கு பொருளாதார ஊக்கத்தை அளிக்கும் வகையில் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஜனாதிபதி திசாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கூடுதலாக, இந்தியா மற்றும் அதற்கு அப்பால் இருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஏற்றுக்கொள்ள இலங்கை அதன் சுற்றுலா உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. இதில் பாரம்பரிய பாதுகாப்பு மற்றும் நிலையான சுற்றுலா கூட்டுத் திட்டங்கள், இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார மற்றும் பொருளாதார உறவுகளை ஒருங்கிணைத்தல் ஆகியவை அடங்கும்.

**எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

ஜனாதிபதியின் இந்த விஜயம் பல்வேறு களங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை விளைவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அவற்றில் பின்வருவன அடங்கும், மேம்படுத்தப்பட்ட வர்த்தக மற்றும் முதலீட்டு இணைப்புகள் மூலம் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல். ஹுயுமுயுசு கட்டமைப்பின் கீழ் பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல். கலாச்சார மற்றும் மத ஈடுபாடுகள் மூலம் மக்களிடையேயான தொடர்புகளை ஆழப்படுத்துதல்.

உள்ளூர் முன்னுரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையுடன் சீரமைக்க பெரிய அளவிலான இணைப்புத் திட்டங்களை மதிப்பாய்வு செய்தல் மற்றும் செம்மைப்படுத்துதல்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் கூட்டு முயற்சிகளை ஆராய்தல்.

சமீபத்தில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்குப் பின்னர் ஜனாதிபதி திசாநாயக்கவின் இந்த முதற் பயணம் இரு நாடுகளும் தங்கள் கூட்டாண்மையை ஆழப்படுத்துவதற்கான புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டை காண்பிப்பதாக வெளியுறவு அமைச்சு கூறுகிறது.

இப் பயணத்தின் பின்னர் முடிவுகள் வரும் ஆண்டுகளில் இந்தியா–இலங்கை உறவுகளின் பாதையை வடிவமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இந்தியாவுக்கு எதிராக கடும் நிலைப்பாட்டை கொண்டுள்ள ஜேவிபியின் முகத் தோற்றமான தேசிய மக்கள் சக்தி இந்திய அரசுடன் பேணவுள்ள உறவு தொடர்பாக பலரும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

இந்தோ – பசுபிக் விவகாரம் சூடு பிடித்துள்ள நிலையில் சீனச் சார்புப் போக்குள்ள அநுரகுமார திஸாநாயக்க இந்திய நிலைப்பாட்டைக் கடந்து தனது அரசியலை முன்னெடுக்க முடியாததென்று அவதானிகள் கூறுகின்றனர்.

இந்தியாவும் அநுராவை அனைக்கும் எனவும் அநுராவும் இந்தியாவை அரவனைத்துச் செல்ல வேண்டிய இக்கட்டான அரசியல் – பொருளாதார சூழல் உண்டு எனவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியின்போது இந்திய இலங்கைக்கு 4 பில்லியன்களை கடனாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அநுரவிற்கு டில்லியில் அமோக வரவேற்பு





இந்தியாவுக்கு பயணம் செய்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.விமான நிலையத்தில் இருந்து செல்லும் வழிகளில் பதாதைகள் கட்டப்பட்டு வரவேற்பு வழங்கப்பட்டுள்ளதை படங்களில் காணலாம்.

## காங்கேசன்துறை - நாகை படகுச்சேவை

# மேம்பட்ட வசதிகளுடன் ஜனவரியில் மீள் ஆரம்பம்

### சுபம் குழுமத்தின் தலைவர் சுந்தர்ராஜ் தெரிவிப்பு

காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையிலான படகுசேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் வாரத்துக்கு ஆறுநாட்கள் மேம்பட்ட வசதிகளுடன் ஆரம்பமாகவுள்ளதாக சுபம் குழுமத்தின் தலைவரும், காங்கேசன்துறை, நாகப்பட்டனம் படகுசேவை முதலீட்டாளருமான பொன்னுசாமி சுந்தர்ராஜ் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காங்கேசன்துறை, நாகப்பட்டினத்துக்கு இடையிலான படகுசேவை கடந்த ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் காலநிலை முன்னெச்சரிக்கையின் காரணமாக தற்காலிகமாக சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் 23ஆம் திகதி வங்களா விரிகுடாவில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக்குவதற்கான நிலைமைகளும் உள்ளன. இதனால் 19ஆம் திகதி மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடாகியிருந்த படகு



சேவையை சிறிய காலத்திற்கு ஒத்திவைத்துள்ளோம்.

இந்நிலையில் எதிர்வரும் ஜனவரியில் மீண்டும் காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டனத்துக்கும் இடையிலான படகுசேவை ஆரம்பிக்கப்படவுள்ளதோடு இதனை சுபம் நிறுவனமே நேரடியாக கையாளப்போகின்றது.

நாங்கள் படகுசேவையை கடந்த மூன்று மாதகாலத்தில் முன்னெடுத்த போது சிறுசிறு சறுக்கல்களும் காணப்பட்டுள்ளன. எனினும் அனைத்து தரப்பினரினதும் ஒத்துழைப்புக்களுடன் சிறப்பாக எமது சேவையை கடந்த காலத்தில் முன்னெடுக்க முடிந்திருந்தது.

மீள படகுசேவை ஆரம்பிக்கப்படும்போது, சில மேம்பட்ட வசதிகளை முன்னெடுத்துள்ளோம். முக்கியமாக சுற்றுலாப்பயணிகளை அதிகரிக்கும் நோக்கத்தில் பயணக்கட்டணங்களை மாற்றியமைத்துள்ளோம்.

தற்போது இருவழிக் கட்டணமாக 9700 இந்திய ரூபா அறவிடப்படுகின்றது. அதனை நாம் 8500இந்திய ரூபாவாக மாற்றியமைப்பதோடு பத்து கிலோகிராம் எடையுடைய பொதியையும் இலவசமாகக் கொண்டுவர முடியும். என்றார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 01ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்**: இன்று பணத்தை திறமையுடன் கையாள வேண்டியது அவசியம்.

**ரிஷபம்**: இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

**மிதுனம்**: இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும் நாள்.

**கடகம்**: இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும்.

**சிம்மம்**: இன்று உங்களுக்கு சிறந்த நாளாக இருக்கும்.

**கன்னி**: இன்று உங்களுக்கு முன்னேற்றம் எளிதில் கிடைக்கும்.

**துலாம்**: இன்று சிறிய முயற்சியின் மூலம் பெரிய வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்**: உங்கள் பணிகளை சமாளிப்பது கடினமாக காண்பீர்கள்.

**தனுசு**: இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.

**மகரம்**: இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாளாக இருக்கும்.

**கும்பம்**: இன்று உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு உகந்த நாள்.

**மீனம்**: இன்று நீங்கள் சில ஏமாற்றங்களைக் காண்பீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 01:54 வரை பிரதமை பின்பு துவிதியை.
**நட்சத்திரம்:** இன்று அதிகாலை 03:37 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.
**யோகம்:** சித்த, அமிர்த.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** விசாகம்.
**சூலம்:** கிழக்கு.
**இராகு காலம்:** காலை 07:30 முதல் காலை 09:00 வரை.
**குளிகை:** மதியம் 01:30 முதல் மதியம் 03:00 வரை.
**எமகண்டம்:** காலை 10:30 பிற்பகல் 12:00 வரை.




“மலையகம் 200க்கு அப்பால்“ எனும் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் வெளியீடு கொழும்பு தமிழ் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது. அமரர் இரா.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு குழுவின் தலைவர் எம்.வாமதேவன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம அதிதிகளாக சிறுவர்,மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். மலையகத்தின் மூத்த எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# புத்தளத்தில் உப்பு உற்பத்தி பாதிப்பு

**(கனூஷியா புஷ்பகுமார்)**

நாடளாவிய ரீதியில் நிலவிய பலத்த மழை காரணமாக புத்தளத்தில் உப்பு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. புத்தளத்தில் காணப்படும் உப்பளமானது அண்மைக்காலம் வரையில் நாட்டின் மொத்த உற்பத்தி பங்களிப்பில் 45 வீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை வழங்கி வருகிறது. புத்தளம் மாவட்டத்தின் புத்தளம், கல்பிட்டி, வனாத்தவில்லு, முந்தலம் ஆகிய பிரதேச செயலகப் பகுதிகளில் சுமார் 4000 ஹெக்டேயர் பரப்பளவில் 2,000க்கும் மேற்பட்டோர் உப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை, இத்தொழில் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 20,000ஐத் தாண்டியுள்ளது. இலங்கையின் உப்பு நுகர்வு ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மெட்றிக் டொன் ஆகும். அதில் புத்தளம் மாவட்டத்திலிருந்து கடந்த வருடங்களில் 46,000 மெட்றிக் டொன் உற்பத்தி கிடைத்துள்ளன. எனினும், இந்த நிலை 2023ஆம் ஆண்டுக்குப் பின்னர் 40 வீதத்துக்கும் குறைவாகவே காணப்படுகிறது.

# முட்டை விலை குறையும் சாத்தியம்

எதிர்வரும் பண்டிகை காலத்திற்காக முட்டையொன்றை சில்லறை விலையில் 30 முதல் 35 ரூபாவிற்கு விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

சராசரியாக 50 கிராமுக்கு குறைவான எடையுள்ள முட்டை 30 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கலாம் என அந்த சங்கத்தின் தலைவர் என்டன் அப்புஹாமி தெரிவித்தார். 55 கிராமுக்கு மேல் உள்ள பெரிய முட்டையை 33 ரூபாய் முதல் 35 ரூபாய் வரையில் வாங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். சந்தையில் பெரும்பாலும் இந்த விலைக்கே முட்டைகள் கிடைப்பதாகவும், முட்டைகளை இந்த விலைக்கு மேல் வாங்க வேண்டாம் எனவும் நுகர்வோர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த என்டன் அப்புஹாமி, ”வரும் பண்டிகை காலத்தில் முட்டையை 30 முதல் 35 ரூபாய் வரை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளோம்.

எனவே, இன்று முதல் அனைத்து சில்லறை கடைகளிலும் முட்டையை 35 ரூபாய்க்கு குறைவாக விற்குமாறு கேட்டுக்கொள்கிறோம். முட்டை உற்பத்தி அதிகரித்து சந்தையில் இன்று விலை நிலையாக உள்ளது. அனைத்து விவசாயிகளுக்கும் முட்டை உற்பத்தி உபரியாக உள்ளது. 50 கிராம் முட்டையை 30 ரூபாய் முதல் 32 ரூபாய்க்கு பெறலாம்.. 55 கிராமுக்கு மேல் உள்ள முட்டைகள் 33,34,35 ஆகிய விலைகளில் வாங்கலாம். அதற்கு அதிகமாக விற்றால் அதனை வாங்க வேண்டாம்” என்றார்.

# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு உலக வங்கி 120 கோடி உதவி

**(முகம்மட் முக்தார்)**

நாட்டில் நெற்செய்கை அல்லாத வர்த்தக பயிர்ச்செய்கை வசதிகளை மேம்படுத்துவதற்கு உலக வங்கி விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்டம் ஊடாக விவசாய அமைச்சுக்கு நிதிஉதவியை வழங்குவதற்கு முன்வந்துள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சுக்கு 120 கோடி ரூபா நிதியை மானிய உதவியாக வழங்குவதற்கும் உலக வங்கி முன்வந்துள்ளதாக விவசாய அமைச்சின் ஏற்றுமதி திணைக்களம் அறிவித்துள்ளது. வர்த்தகப்பயிர்களில் பழப்பயிர் உற்பத்தியான அன்னாசி உற்பத்தி, மாம்பழ உற்பத்தி, இலங்கையின் தனித்துவமான ரம்புட்டான், மங்குஸ்தான் , அம்புல் (புளி) வாழைப்பழம் ஆகிய பழப்பயிர்களை உள்நாட்டில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்காக இந்நிதி உதவியை உலக வங்கி வழங்க உள்ளது. இலங்கையின் பழவகைகளுக்கு அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகளில் பெருமளவு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் பெருமளவு அன்னியச்செலவாணியை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது .

மேல்மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், வட மேல் மாகாணம், மத்திய மாகாணம் என்பவற்றில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# மருந்துகளின் விலையை குறைப்பதில் சிக்கல்

மருந்துகளின் விலை குறைப்பதற்கான சாத்தியம் காணப்படுகின்ற போதிலும் மருந்து இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்றினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு காரணமாக விலையை குறைக்க முடியாதுள்ளதாக தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையின் தலைவர் வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். கொழும்பில் சனிக்கிழமை (14) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

தடை உத்தரவு நீக்கப்பட்ட பின்னர், மருந்து விலை குறைப்பு முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டு, மக்களுக்கு மலிவு விலையில் மருந்துகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையம் எதிர்கொண்ட நெருக்கடியிலிருந்து மீண்டு தற்போது ஸ்திரமான நிலையை எட்டியுள்ளது.

விரைவில் உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக இந்த அதிகாரசபை மாறும் சாத்தியம் காணப்படுகிறது.

மக்களுக்கு பாதுகாப்பான, தரமான மற்றும் நியாயமான விலையில் மருந்துகளை வழங்குவதே தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் முதன்மை பொறுப்பும் நோக்கமும் ஆகும்.அண்மைக்காலமாக மருந்துகள் தொடர்பான நம்பிக்கை பலவீனமடைந்துள்ளது” என்றார்.

# உள்ளூ.சபை வேட்புமனுக்களை நிராகரிக்க புதிய சட்டத் திருத்தம்

### நாடாளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை

**(கனூஷியா புஷ்பகுமார்)**

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கான புதிய சட்டத் திருத்தங்களை எதிர்வரும் ஓரிரு வாரங்களில் நாடாளுமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் வேட்புமனுக்களை நிராகரிப்பதற்கான சட்டத் திருத்த செயல்முறையை ஆரம்பித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பழைய வேட்புமனுக்களை நிராகரிப்பதன் மூலம் 2022ஆம் ஆண்டின் பின்னர் புதிதாக இணைக்கப்பட்ட 10 இலட்சம் வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

340 உள்ளூராட்சி சபை நிறுவனங்களுக்காக 8,711 வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்தன. அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களிலிருந்து 80,672 பேர், 24 மாநகரசபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளுக்காக வேட்புமனுக்கள் கோரப்பட்டன.

இவ்வாறு உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக வேட்புமனுக்களை வழங்கியவர்களுள் சுமார் 3000 அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளடங்குகின்றனர்.

வேட்புமனுக்களை வழங்கிய குறித்த வேட்பாளர்களுள் சுமார் 8000 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதுடன் சிலர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# சுயநிர்ணய உரிமையும் சர்வதேசச் சமவாயமும்

இனப்பிரச்சினைக்கான தீர்வு பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இருந்து ஏதோவொரு வழியில் ஏமாற்றப்பட்டே வருகின்றது என்பது பகிரங்கமாகத் தெரிந்த ஒன்று. சிங்கள - தமிழ் முரண்பாடு இன்றுவரை தொடர்கின்றது என்பதற்குப் பல காரணங்கள் உண்டு.

1983 இல் இருந்து இந்திய அரசு ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் தலையீடு செய்திருக்கிறது. பின்னர், அது சர்வதேச விவகாரமாக மாறி 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ஜெனீவா மனித உரிமைச் சபையில் விவாதிக்கப்பட்டும் வருகின்றது.

ஆனால், ஈழத்தமிழர்கள் கோருகின்ற சுயநிர்ணய உரிமை பற்றிய பேச்சுக்கள் ஒருபோதும் ஜெனீவாவில் விவாதிக்கப்படவில்லை. அத்துடன் இன அழிப்பு பற்றிய உரையாடல்கள் கூட இல்லை. மாறாக போர்க் குற்ற விசாரணை அல்லது போர்க் குற்றம் புரிந்த படையினருக்குப் பயணத் தடைவிதிப்பது போன்ற பேச்சுக்கள் மாத்திரமே விஞ்சியுள்ளன.

ஆனால், 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வாக ஜெனிவா மாத்திரமல்ல அமெரிக்க அரசு கூட பேசியிருக்கிறது. 2012 இல் அமெரிக்கா ஜெனிவாவில் சமர்ப்பித்த இலங்கை தொடர்பான பிரேரணையில்கூட 13 முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

2002 இல் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் பேச்சுக்கள் ஆரம்பித்தபோது போரின் பக்கவிளைவுகளுக்குரிய தீர்வுகள் பற்றிய உரையாடல்கள் மாத்திரமே முதலில் இடம்பெற்றன. சுயநிர்ணய உரிமை - சமஸ்டி என்றெல்லாம் பின்னர் பேச்சுக்கள் எழுந்தன. இச் சந்தர்ப்பத்தில் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம் பற்றிய விடயம் முக்கியமாக இருந்தது.

ஆனால், கொழும்பில் எழுந்த அரசியல் நெருக்கடிகளினால் பின்னர் அது வேறொரு திசைக்குச் சென்றுவிட்டது. இப் பின்னணியில்தான் மகிந்த ராஜபக்ச 2005 இல் ஜனாதிபதியானார். சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் ICCPR எனப்படும் சர்வதேசச் சமவாயத்தை (International Covenant on Civil and Political Rights- ICCPR) மகிந்த 2007 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துச் சட்டமாக்கினார். ஆனால், சர்வதேசச் சமவாயத்தில் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை என்ற உறுப்புரையை நீக்கம் செய்து சமவாயச் சட்டம் என்ற பெயரில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் 56 ஆம் இலக்கச் சட்டமாக மகிந்த அரசாங்கம் இணைத்திருந்தது. அதுவும் அரசியல் யாப்பில் இணைக்காமல் சாதாரண சட்டமாகவே மகிந்த அதனை இணைத்தார்.

அத்துடன், ICCPR எனப்படும் இந்தச் சமவாயத்தில் ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களின் சுயநிர்ணய உரிமை (Self-Determination) அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது பிரதான உள்ளடக்கமாகும். ஆனால், சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டு, இலங்கைக்கு ஏற்ற சில பகுதிகள் மாத்திரமே 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பல தேசிய இனங்கள் வாழும் நாடொன்றில், மக்களிடையே இனக் குரோதங்கள், மதங்களிடையே வெறுப்புகள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மனிதகுல விரோதங்களைத் தூண்டுதல் ஆகிய குற்றச் செயல்கள் எழக்கூடாதென்ற நோக்கிலேயே ICCPR எனப்படும் சமவாயத்தின் பிரிவு 3(1) சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப் புரிதல் இன்றியே இலங்கை தமக்கு ஏற்றவாறு மாற்றியமைத்து இச் சமவாயத்தைச் சட்டமாக்கியுள்ளது.

இச் சமவாயச் சட்டத்தை பயன்படுத்தி ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை முற்றாகவே நிராகரிக்கும் செயற்பாட்டில் அப்போதிருந்தே மகிந்த அரசாங்கம் ஈடுபட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி என்று மார் தட்டிக் கொண்டு ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் செய்த புதிய அரசியல் யாப்புக்கான நகல் வரைபில்கூட சுயநிர்ணய உரிமை பற்றிய உள்ளடக்கங்கள் இல்லை.

2020 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த ராஜபக்ச குடும்பம் குறிப்பாக கோட்டாபய, இனப் பிரச்சினை என ஒன்று இல்லை என்ற தொனியில் தனது கொள்கை விளக்கவுரையை நிகழ்த்தியிருந்தார்.

இப் பின்னணியில் மாற்றம் என்றும் சோஷலிசம் - சமத்துவம் என்றும் கூவிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அநுரகுமார திஸாநாயக்கவும், ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைகளை வெறுமனே நிர்வாக அதிகாரமாகக் கருதுகிறார். ஆகவே, சிங்கள தலைவர்கள் சுயநிர்ணய உரிமையை வழங்கக்கூடாது என்ற விடயத்தில் தெளிவாக இருக்கின்றனர் என்பது கண்கூடு.

அதேநேரம், சர்வதேசச் சமவாயத்தில் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்பட்டுள்ள உறுப்புரை 1 இலும் கோளாறுகள் உள்ளன. குறிப்பாகச் சுயநிர்ணய உரிமை பற்றிக் கூறப்படுகின்ற உறுப்புரை 1 இல் ஒரு நாட்டில் வாழும் "அனைத்து மக்கள்கள்" (All peoples) என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், ஒரு நாட்டில் வாழும் அனைத்துத் தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றோ, தேசிய இனம் ஒன்றைத் தேசமாக ஏற்க வேண்டுமென்றோ குறிப்பிட்டுக் கூறப்படவில்லை. இதைத்தான் இலங்கையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிறது. ICCPR உறுப்புரிரை 1 இல் கூறப்பட்டுள்ளது போன்று இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்ற கோணத்தில் இலங்கை கருதியிருக்கிறது போலும்.

ஆகவே, ஆட்சி உரிமை மறுக்கப்பட்ட நாடொன்றில் வாழும் தேசிய இனங்களை ஒரு தேசமாக அங்கீகரிக்கக் கூடிய முறையில் சுயநிர்ணய உரிமை குறித்து ICCPR எனப்படும் சமவாயத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுக் கூறப்படவில்லை என்பதையும் அதன் கோளாறுகள் பற்றியும் சர்வதேச அரங்கில் ஒருமித்த குரலாக பேச வேண்டியது தமிழர் தரப்பின் பொறுப்பல்லவா? இன்று வரை அவர்கள் இதனை சுட்டிக்காட்டினார்களா?

# திட்டமிட்ட குடியேற்றங்கள்




# வவுனியா மாவட்டத்துடன் இணைப்பு?

யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய வடமாகாணம் வவுனியா மாவட்டத்தின் வடக்கின் எல்லைப் பகுதிகளில் குடியேற்றம் செய்யப்பட்ட சிங்களக் கிராமங்கள் சிலவற்றை, வவுனியா மாவட்டத்தின் நிர்வாகத்துக்குள் இணைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது. குறித்த சிங்களக் கிராமங்கள் வவுனியா மாவட்ட எல்லையில் அமைந்துள்ள நிலையில் வவுனியா மாவட்டத்துடன் இணைப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடம் யூன் மாதம் இடம்பெற்ற இலங்கைத் தேசிய எல்லை நிர்ணய குழுவால் வவுனியா மாவட்ட நிர்வாகத்துக்கு இந்த விடயம் பரிந்துரைக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அது குறித்து அவதானம் செலுத்தப் பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தகவல்கள் கசிந்துள்ளன.

> அனுராதபுர செயலகத்துடன் இணைக்கப்பட்டிருந்த சிங்களக் குடியேற்ற பகுதிகளை நிர்வாகச் சிக்கல்களைக் காரணம் கூறி வவுனியா மாவட்டத்துடன் இணைக்க மேற்கொள்ளப்படும் ஏற்பாடு தமிழர்களின் இன விகிதாசாரத்தில் மாற்றங்களை உருவாக்கும்

2009 மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னர் வவுனியா வடக்கின் எல்லைப் பகுதிகளில் பெரும் காடுகள் அழிக்கப்பட்டு அரசாங்கத்தின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களின் நிர்வாகச் செயற்பாடுகளை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து முன்னெடுக்க ரணில் அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இது தொடர்பான முன்மொழிவு எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் வவுனியா மாவட்ட நிர்வாகத்துக்கு கடந்த ஆண்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

போகஸ்வெல-1, போகஸ்வெல-2, வெகரதென்ன, கம்பிலிவெல, நாமல்கம, நந்திமித்திரகம, சலினிகம ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள், தாங்கள் அனுராதபுர மாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் அரச நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதுடன் பல்வேறு அசௌகரியங்களையும் சந்தித்து வருவதாகவும், எனவே வவுனியா மாவட்ட நிர்வாகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கும், ஜனாதிபதி செயலகத்துக்கும் தெரியப்படுத்தியிருந்தனர்.

ஆகவே, மக்களின் இக் கோரிக்கைகளை ஏற்று வவுனியா மாவட்ட செயலகத்துடன் இணைப்பது தொடர்பாக வவுனியா மாவட்ட அரச அதிபருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகிறது. தமிழ் மக்களின் கடும் எதிர்ப்புக்களையும் மீறி வவுனியா எல்லைப் பகுதிகளில் இச் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்தக் குடியேற்றங்கள் வவுனியாவில் தமிழர்களின் இன விகிதாசாரத்தைக் குறைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சூழ்ச்சி என்று அப்போதே தமிழ்த் தேசியக் கட்சிகள் சுட்டிக்காட்டியிருந்தன. நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், தற்போது நிர்வாக நடைமுறைச் சிக்கல்களைக் காரணமாகக் காண்பித்து அந்தக் கிராமங்களை வவுனியாவுடன் இணைக்கப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ரணில் அரசாங்கத்தின் இச் செயற்பாட்டை புதிய அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளமை தொடர்பாக இதுவரை எந்தவொரு அமைச்சர்களும் அதிகாரபூர்வமாகக் கருத்திடவில்லை. முன்னைய அரசாங்கத்தின் எல்லை மீள் நிர்ணயம் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி கடந்த வருடம் கடும் அதிருப்தியும் வெளியிட்டிருந்தது.

ஆனால், வடக்குக் கிழக்குத் தமிழர் பகுதியில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக ஜேவிபியின் முகத் தோற்றமான தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் வெளிப்படையாகக் கருத்துக் கூறவில்லை.

இப் பின்னணியிலேயே வவுனியா மாவட்டத்துடன் அனுராதபுரம் எல்லையில் உள்ள சிங்களக் குடியேற்றக் கிராமங்கள் இணைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.



# ஆறு வருடங்களாக திறக்கப்படாத பொருளாதார மத்திய நிலையம்






கி.வசந்தன்

வவுனியாவில் 295 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் கடந்த ஆறு ஆண்டுகள் நடந்தும் திறக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

இந்நிலையில், பகிரங்க கேள்வி கோரல் மூலமாக கடைகளை வழங்கி அதனைச் செயற்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறிப்பாக 295 மில்லியன் ரூபா செலவில் அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

ஓமந்தையில் அமைப்பதா? தாண்டிக்குளத்தில் அமைப்பதா? என்று அரசியல்வாதிகளின் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் மூன்றுமுறிப்பு பகுதியில் அமைக்கப்பட்ட குறித்த பொருளாதார மத்திய நிலையமானது இதுவரை திறக்கப்படாத நிலையில் கட்டடம் சேதமடையும் நிலையில் காட்சியளித்து வருகின்றது.

இந்நிலையில், குறித்த பொருளாதார மத்திய நிலையத்தைப் பகிரங்க கேள்வி கோரலூடாக வழங்கும் பட்சத்தில் விவசாயிகள் நியாயமான விலைக்கு தமது உற்பத்திப் பொருட்களை விற்க முடியும் எனத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தற்போது வவுனியாவில் உள்ள மொத்த மரக்கறி கொள்வனவாளர்கள் சர்வாதிகாரப் போக்கோடு செயற்படுகின்றனர்.அத்தோடு 10 வீதம் என்ற தரகுப் பணத்தைப் பெறும் நிலை காணப்படுவதோடு சில வேளைகளில் பொருட்கள் விற்பனை செய்யப்படவில்லை என விவசாயிகளிடம் பணம் வழங்கப்படாத நிகழ்வுகளும் நடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந் நிலையம் திறக்கப்படும் போது விவசாயிகளின் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் விவசாய அமைச்சரும் புதிய அரசும் ஆவன செய்ய வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## வவுனியா குளத்தில் இளைஞரின் சடலம் மீட்பு

கி.வசந்தன்



வவுனியா, சேமமடு குளத்தின் வான் பகுதியில் இருந்து அரச ஊழியர் ஒருவரின் சடலம் நேற்று (15) மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளை பராமரிக்கும் பணி செய்து வருகின்றார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் (14) மாலை குறித்த இளைஞர் சேமமடு குளத்தின் ஆற்றுப் பகுதிக்கு சென்றுள்ளார். இந்நிலையில் நீண்ட நேரமாகிய நிலையில் அவரை காணாத நண்பர்கள் தேடியுள்ளனர். பின்னர் அவரது சடலம் நேற்று (15) காலை குறித்த ஆற்றுப் பகுதியில் இருந்து இளைஞர்களால் மீட்கப்பட்டது. சம்பவத்தில் மகாறம்பைக்குளம் பகுதியை சேர்ந்த நிரஞ்சன் என்ற அரச ஊழியரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிசார் விசாரணைகளை முன னெடுத்து வருகின்றனர்.

## கசிப்புடன் ஒருவர் கைது

பு.கஜிந்தன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கரத்தை பகுதியில் நேற்று 40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார். சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத்துக்கு அருகாமையில் வைத்து குறித்த சந்தேக நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 1.5 லீட்டர் சகிப்பு மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எலிக்காய்ச்சலில் இளைஞன் பலி

கரவெட்டி நிருபர்

யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் கடந்த 3 நாட்களாக அனுமதிக்கப்பட்டிருந்த கரவெட்டி யைச் சேர்ந்த 23 வயது இளைஞன் சிகிச்சை பலன் இன்றி சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 11ஆம் திகதி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டு உடனடியாக அன்றைய தினமே நோயின் தீவிர நிலை உணரப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பட்டிருந்தார்

அங்கு சிகிச்சை பெற்றுவந்த வேளை நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்தார்

இவருடன் இதுவரை 8 பேர் எலிக் காய்ச்சலுக்கு யாழ். மாவட்டத்தில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் அதிகமானோர் வடமராட்சிப் பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

## எலிக்காய்ச்சல் தாக்கம் படிப்படியாக குறைவு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் எலிக்காய்ச்சல் எனச் சந்தேகிக்கப்பட்டு சேர்க்கப்படுபவர்களின் எண்ணிகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

ஓரிரு தினங்களில் வைத்தியசாலையில் சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைந்து நிலைமை சரியாகிவிடும் என்று வைத்தியர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

“மக்கள் தற்போது முன்னெடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும். காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் ஆரம்பத்திலேயே வைத்தியசாலைக்கு வர வேண்டும். சிகிச்சை எடுக்க வேண்டும். இதன்மூலம் நோய் தீவிரமாகுவதையும், இறப்பு ஏற்படுவதையும் தடுக்கலாம், குறைக்கலாம்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இதுவரை 66 பேர் எலிக்காய்ச்சல் நோய் அறிகுறிகளுடன் வந்து சிகிச்சை பெற்றுள்ளார்கள். தற்போது 32 நோயாளர்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுகின்றார்கள். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கன்றனர்.

## நாவற்குழியில் சட்டவிரோத பலகைகளுடன் இருவர் கைது



பு.கஜிந்தன்

மல்லாவியில் இருந்து 15 இலட்சம் ரூபா பெறுமதியான மரப் பலகைகளை டிப்பர் வாகனத்தில் சட்டவிரோதமாக எடுத்து வந்த இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸாரால் நாவற்குழி பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அன்ரன் பாலசிங்கத்தின் 18ஆவது ஆண்டு நினைவேந்தல்

பு.கஜிந்தன்






தமிழ்தேசத்தின் அரசியல் ஆணிவேராக திகழ்ந்த தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 18ஆவது ஆண்டு நினைவுதினம் ஜனநாயக போராளிகள் கட்சியினரால் நேற்று முன்தினம் பருத்தித்துறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈகைச்சுடரினை ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினார். அதனை தொடர்ந்து மலர்வணக்கத்தில் ஏனைய கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டு தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் நினைவேந்தலை மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர்.

அத்தோடு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில், மாவட்டக் கிளையின் செயலாளர் வீரவாகு விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில், கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீரில் மூழ்கிய இருவர் கடற்படையால் மீட்பு

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், காரைநகர் கடலில் நீரில் மூழ்கிய இருவரை பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினர் மற்றும் கடற்படையினால் நேற்று முன்தினம் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

கசூரினா கடற்கரைக்கு வருகை தந்த யுவதியும் இளைஞனும் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இதன்போது விரைந்து செயற்பட்ட பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினரும், கடற்படையினரும் நீரில் அடித்துச் செல்லப்பட்ட இருவரையும் காப்பாற்றியுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட யுவதிக்கு பாதிப்புகள் இல்லாத நிலையில் அவர் வீடு சென்றுள்ளார். மற்றைய இளைஞன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

தகுந்த நேரத்தில் விரைந்து செயற்பட்டு இரண்டு உயிர்களையும் காப்பாற்றிய, உயிர் காக்கும் பொலிஸ் பிரிவினருக்கும், கடற் படையினருக்கும் பலரும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.





சூரிய நிறுவகத்தினால் நடாத்தப்படும், இரண்டாம் மொழி சிங்கள கற்கைநெறியை பூர்த்தி செய்த யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் – சுதுமலை பகுதியில் அமைந்துள்ள தனியார் மண்டபம் ஒன்றில் நடைபெற்றது. சூரிய நிறுவகத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் த தே.பிரேமராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஒலிவர் ப்ராம், நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவும், சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் நவீன் திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உலக சமாதான ஆலயத்தின் மகாதவவேள்வி



உலக சமாதான ஆலயத்தின் யாழ்ப்பாண கிளையினாலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியிலிருந்து காலை 8.30 மணிவரை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய மண்டபத்தில் திருமூர்த்தி மலையிருந்து நடைபெறும் நிகழ்வுகளை நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளதுடன் கலந்து கொள்பவர்களுக்கு இறை பிரசாதங்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவின் திருமூர்த்தி மலையில் அமைந்துள்ள தென்கையிலை உலக சமாதான ஆலயத்தினால் வருடந்தோறும் உலகவாழ் மக்களின் நன்மைக்காக, பிரபஞ்சத்தில் சாந்தியும் சமாதானமும் அமைதியும் வேண்டி நடத்தப்பட்டு வருகின்ற பிரபஞ்ச நல மகாதவ வேள்வித் தொடர் வரிசையில் இவ்வாண்டிற்கான 35ஆவது தவவேள்வியானது எதிர்வரும் (22) திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஜனவரி 12.01.2025ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையிலான 21 நாட்கள் தொடர்ச்சியாக ஞானவள்ளல் பரஞ்சோதி மகான் தவவேள்வியினை பிரணவாலயத்தின் தவபீடத்திலிருந்து இயற்றவுள்ளார்.

இந்நிகழ்வுகளையொட்டி உலகெங்கும் ஆன்மிக புதுக்கூட்டுப்பிரார்த்தனைகள் நடாத்தப்படவுள்ளன. இக்காலைப்பகுதியில் பல்வேறு நாடுகளிலும் கூட்டுப்பிரார்த்தனைகள் மற்றும் சத்சங்கம், அருளுரைகள், அன்னதானங்கள் என்பன நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

# எரியும் உடல்களின் துர்வாடையும்









சிரியாவின் தலைநகர் டமஸ்கஸில், குண்டுவீசித் தாக்கப்பட்ட கட்டிடத்தில் மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி பஷர் அல்–ஆசாத் ஆட்சியில் பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட மனித படுகொலையின் விவரங்கள் உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளன.

சிரியாவின் பஷார் அல்–ஆசாத்தின் ஆட்சியின் கீழ் பல ஆண்டுகளாக நடந்த கொலைகள் என்று குடியிருப்பாளர்களும், உரிமைக் குழுக்களும் விவரித்ததைத் தொடர்ந்து, டமஸ்களின் Tadamon மாவட்டம் எலும்புகளால் சிதறிக்கிடக்கிறது.

படுகொலையின் காட்சிகளைக் காட்டும் காணொளி 2022ஆம் ஆண்டு வெளியாகியிருந்ததுடன், இதனை தொடர்ந்து ஆசாத் மிகவும் மோசமான தலைவராக அறியப்பட்டார்.

இராணுவச் சீருடையில் இருந்த ஒரு நபர் நிராயுதபாணிகளான, கண்கள் கட்டப்பட்ட மக்களை ஒரு பெரிய பள்ளத்தை நோக்கி அழைத்துச் சென்று, அவர்களை ஓடச் சொல்லி, அவர்கள் விளிம்பை நெருங்கும்போது அவர்களை நேருக்கு நேர் சுடும் காணொளி வெளியானதைத் தொடர்ந்து Tadamon பிரபலமடைந்தது.

இச்சம்பவம் 2013ஆம் ஆண்டு வரை நடந்த குற்றங்களின் தொடராக இருந்தாலும், அண்மைக்காலம் வரை இதுபோன்ற தவறான கொலைகள் தொடர்வதாக உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர்.

சிரியப் படைகளால் பொதுமக்கள் அங்கு அழைத்து வரப்படுவதைக் கண்டதாகவும், தொடர்ந்து துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதாகவும், பின்னர் எரியும் உடல்களின் துர்நாற்றம் வீசியதாகவும் அவர்கள் இப்போது கூறுகிறார்கள்.

ஆசாத்தின் கொடூர ஆட்சியில் கொல்லப்பட்டவர்களின் எலும்புகள் மாவட்டம் முழுவதும் சிதறிக் கிடப்பதாகவும், சில சமயங்களில் மனித எலும்புகளை சிதறடித்து விளையாட சிறு குழந்தைகள் கூட ஆசைப்படுவதாகவும் உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர்.

2011ஆம் ஆண்டு நாட்டில் உள்நாட்டுப் போர் ஆரம்பமான போது அப்பகுதியை விட்டு வெளியேறிய மக்களுடன் இணையாமல் அங்கேயே தங்கியிருந்தவர் மொஹமட் அல் தர்ரா.

Tadamonபகுதியில் இருந்து ஏராளமான மக்கள் வெளியேறியதாக அவர் கூறுகிறார். ஆனால் அவர் தனது அடுக்குமாடிக் கட்டிடம் கொள்ளையர்களால் பிடிபடும் என்ற அச்சத்தில் தனது குடும்பத்துடன் தங்க முடிவு செய்தார்.

அப்போதிருந்து, ஒவ்வொரு ஆண்டும் நிராயுதபாணிகளான மக்கள், கண்கள் கட்டப்பட்ட மற்றும் கைவிலங்குகளுடன், Tadamon படுகொலைகள் நடந்ததாக நம்பப்படும் இடத்திற்கு சிரியப் படைகளால்கொண்டு வரப்படுவதைக் கண்டதாக அவர் கூறுகிறார்.

பெரும்பாலான கொலைகள் இரவில் நடந்ததாக அவர் கூறுகிறார். தான் கேட்கும் ஒவ்வொரு துப்பாக்கிச் சத்தமும் ஒரு நபரைக் குறிவைத்து அருகில் சுடப்பட்டதை விரைவில் உணர்ந்ததாக அவர் கூறுகிறார்.

தூசி மற்றும் சுற்றுச்சூழல் மாசு நிரம்பிய கட்டிடங்களின் நடுவில் ஒரு சிறிய சேரி தெருவின் முடிவில், கொலைகள் நடத்தப்பட்ட Tadamon வெகுஜன கொலை பள்ளம் அமைந்துள்ளது.

குப்பைக் குவியல்களுக்கு மத்தியில் மனித எலும்புகள் குவிந்து கிடப்பதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் அப்பகுதியில் குடியேறிய மோட்டார் மெக்கானிக் கலீத் ஹூ ரியாவும் இதுபோன்ற சம்பவங்கள் Tadamonஇல் நடந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தப் பகுதியில் மெக்கானிக் கடை நடத்தி வரும் காலீத் ஹூரியா, 2019 ஆம் ஆண்டு அந்தப் பகுதிக்கு திரும்பிய பிறகு, துப்பாக்கிச் சத்தங்களைக் கேட்டதாகவும், சதை எரியும் துர்வாடையை உணர்ந்ததாகவும் கூறினார்.

”இது மரணதண்டனைத் தெரு என்று அழைக்கப்பட்டது. இந்தத் தெருவுக்கு வருபவர்கள் தொலைந்து போனதாகக் கருதப்பட்டனர்,” என்று அவர் கூறினார்,

மேலும் பாதுகாப்புப் படையினர் பெரும்பாலும் தனது அண்டை வீட்டாரிடம் புதைகுழிகளைத் தோண்ட உதவுமாறு கேட்டுக் கொண்டனர்.

”அந்த விஷயங்கள் எங்கள் நினைவில் இருந்து நீங்காது. அது மக்களுக்கு சாதாரணமாகிவிட்டது,” என்று ஹூரியா கூறினார்.

அந்த அவென்யூ ஒரு கொலைத் தெரு என்று அறியப்பட்டது என்று அவர் கூறுகிறார்.

## சிரியாவில் பஷர் அல் – ஆசாத் ஆட்சியில் நடந்த கொடூரம்



அங்கு வந்த எந்த அந்நியரும் அதே விதியை சந்தித்ததாக அவர் கூறுகிறார். அதாவது மரணம்.

ஆசாத் ஆட்சியின் நீடித்த பயம் காரணமாக, பல குடியிருப்பாளர்கள் அங்கு நடந்த கொடூரமான கொலைகளைப் பற்றி பேச தயங்குகிறார்கள்.

எவ்வாறாயினும், சமீபத்திய சிரிய கிளர்ச்சியில் ஆசாத் ஆட்சி வீழ்ச்சியடைந்த நிலையில், இந்த படுகொலைகளுக்கு காரணமானவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று சிரியர்களும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கூறுகின்றன.

பாரிய படுகொலைகள் இடம்பெற்ற பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். சர்வதேச நிபுணர்களுக்கு உரிய விசாரணை நடத்த இடம் கொடுக்க வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன.

தப்பியோடிய ஆசாத் அரசுப் படைகளால் Tadamon வெகுஜனக் கொலைப் பள்ளம் அழிக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

ஆனால், கொல்லப்பட்ட தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய, உயிருடன் இருக்கும் குடும்ப உறுப்பினர்களின் முழுமையான உரிமை மதிக்கப்பட வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன.

2011 ஆம் ஆண்டு முதல் இலட்சக்கணக்கான சிரியர்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சிரியாவில் உள்நாட்டுப் போர் தொடங்கியவுடன், நூறா யிரக்கணக்கான சிரியர்கள் ஆசாத்தின் படைகளால் கொல்லப்பட்டனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

அவருக்கு எதிரான மக்கள் எதிர்ப்பு ஒரு பரந்த உள்நாட்டுப் போராட்டமாக பரவியது, அது பிராந்திய பொருளாதாரங்களின் கவனத்தையும் ஈர்த்தது. ஆசாத்தைப் போலவே, சிரியாவின் ஜனாதிபதியாக இருந்த அவரது தந்தை ஹஃபீஸ், சட்டவிரோத கொலைகளுக்கு பெயர் பெற்ற ஆட்சியாளர்.

2000 இல் அவர் இறந்த பிறகு, ஆசாத் ஜனாதிபதியானார்.

ஹஃபீஸின் ஆட்சியில் நாட்டின் மோசமான சிறைச்சாலை அமைப்பிற்குள் மரணதண்டனைகள் உட்பட, பரவலான நீதிக்கு புறம்பான கொலைகளைச் செய்ததாக உரிமைகள் குழுக்கள் மற்றும் அரசாங்கங்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

2013ஆம் ஆண்டில், Tadamonஇல் குறைந்தது 41 பொதுமக்களைக் கொன்றதாகக் கூறப்படும் ஒரு சிரிய பாதுகாப்பு அதிகாரி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக அமெரிக்க வெளியுறவுத்துறை பயணத் தடையை பிறப்பித்தது.

கொலைகள் தொடர்பாக 2022 இல் வெளியிடப்பட்ட காணொளி சர்வதேச ”மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால்” உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டது.

செயற்கைக்கோள் தொழில்நுட்பமும் சிரியாவில் தடமோன் படுகொலை பள்ளத்தின் சந்தேகத்திற்குரிய தளத்தையும் அடையாளம் கண்டுள்ளது.

சிரிய இராணுவத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான கடுமையான மோதல்களின் போது, Tadamon வெகுஜனக் கொலைகளைச் சுற்றியுள்ள பகுதி வலுவான உலோகத் தடைகளால் மூடப்பட்டதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு முதல், சிரியப் படைகள் Tadamong கொலை கல்லறையில் இருந்து மனித எச்சங்களை அகற்றத் தொடங்கியுள்ளன என்று சில உள்ளூர்வாசிகள் இப்போது கூறுகிறார்கள். குற்றத்தின் எஞ்சியுள்ள முக்கிய ஆதாரங்களை அழிப்பதே இதன் நோக்கமாக இருக்கலாம் என மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) ஆசாத் அரசாங்கம் கவிழ்ந்ததை அடுத்து தப்பி ஓடிய அரச படைகள் சிறையிலுள்ள பல சிரியர்களின் ஆதாரங்களை அழித்திருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் குடும்ப உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

---

மூலம் - **ரொயிட்டர்ஸ்**

தமிழாக்கம் - **ஆர்.மனோசங்கர்**

# மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



இஸ்லாமிய கலாசார தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் ஸாஹிரா கல்லூரியில் அரபு மொழி போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (தமிழ்) எஸ்.எம்.சியாத், நாச்சியாதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். கே.எம். ஜாபர் ஓய்வுபெற்ற மாகாண கல்விப் பணிப்பாளர் (தமிழ்) ஈ. பீர் மொஹமட் ஓய்வு பெற்ற மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) ஏ.அப்துல் சமது மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களினால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(படங்கள் : எம்.ரீ.ஆரிப்)

# நீரில் மூழ்கியுள்ள கற்பிட்டி பிரதேச விவசாய நிலங்கள்



(எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தாழ் நிலப் பிரதேசங்களில் வெள்ள நீரினால் நிறைந்து காணப்படுவதால், கற்பிட்டி பிரதேச மரக்கறிச் செய்கைகளும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 7,740 குடும்பங்களைச் சேர்ந்த 28,014 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. புத்தளம், முந்தல், கற்பிட்டி, ஆராச்சிக்கட்டுவ, பள்ளம, நாத்தாண்டி, மாதம்பை, வண்ணாத்திவில்லு, தங்கொட்டுவ மற்றும் வென்னப்புவ ஆகிய 10 பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 170 கிராம சேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் அத்துடன் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 11 கிராம சேவகர் பிரிவுகளில் 841 குடும்பங்களைச் சேர்ந்த 2823 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பாலக்குடா கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட நுரைச்சோலை, பூலாச்சேனை, மாம்புரி, நரக்கள்ளி, நாவற்காடு, பனையடி,ஏத்தாளை, முசல்பிட்டி , ஆலங்குடா உள்ளிட்ட பல கிராமங்களில் செய்கை செய்யப்பட்டுள்ள ஆயிரத்திற்கு மேற்பட்ட மரக்கறிச் செய்கைகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

# கூட்டுறவு நிறுவனத்தை பலப்படுத்தும் காலம் கனிந்துள்ளது

(எம்.ரீ.ஆரிப்)



நாட்டின் பொருளாதாரத்தைச் சூறையாடும் உயர்மட்ட வர்த்தகர்களிடம் இருந்து நாட்டை விடுவித்து, கூட்டுறவு இயக்கத்தின் ஊடாக பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை வலுவூட்டி கூட்டுறவு நிறுவனத்தை பலப்படுத்தும் காலம் வந்துள்ளதாக வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தெரிவித்தார். மெதிரிகிரிய புதிய நகரில் 300 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் கோப் சிட்டி வர்த்தக நிலையத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போதுள்ள நெல் ஏகபோகத்தை இல்லாமல் செய்து, நெல் கொள்வனவு செய்யப்பட்டு சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலைகளை வலுப்படுத்தி நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதும் வளமான நாட்டை உருவாக்குவதும் புதிய அரசின் நிகழ்ச்சி நிரல் என்றும் அவர் தெரிவித்தார்.

இனி வரும் காலங்களில் இந்நாட்டின் தீர்க்கமான காரணியாக கூட்டுறவு இயக்கம் மேம்படுத்தப்படும்.சாதாரண மக்களை வாட்டி வதைக்கும் அரிசித் தட்டுப்பாட்டைப் போக்க நாட்டில் உற்பத்தியாகும் அரிசியில் கணிசமான தொகையை கொள்முதல் செய்து சந்தைக்கு விநியோகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு வர்க்கத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை ஜனாதிபதி விரிவுபடுத்தியுள்ளதுடன், விவசாயிகள் இணைந்து பலப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கௌபி , குரக்கன்,பயறு மற்றும் உழுந்து உள்ளிட்ட தானியங்களை அதிகளவில் பயிரிட வேண்டும்.இதற்கான வசதிகளையும் ஆதரவையும் வழங்கி அறுவடையை முழுமையாக வழங்குவதற்கான சந்தையை உருவாக்குவதே அரசின் நோக்கம் எனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

# குளத்துக் கட்டு நடைபாதையில் வளர்ந்திருந்த பற்றை துப்புரவு



(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் நெடுங்குளத்தில் வான் சந்தியிலிருந்து குளத்துக் கட்டு நடைபாதையில் வளர்ந்திருந்த பற்றைகளை துப்புரவு செய்யும் சிரமதானப் பணிகள் (14) நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நடைபெற்றன.

இத் துப்புரவு சிரமதானம் தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் வட்டாரம் 04 செயற்குழுவின் தலைவி சித்தி சலீமா தலைமையில் செயற்குழுவினர் மற்றும் புத்தளம் நகர செயற்குழு உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மேலும் பலர் தாமாக முன்வந்து ஒத்துழைப்பு வழங்கியமை புத்தளம் மக்கள் கொண்டுள்ள ஆதரவை எடுத்துக்காட்டியது.

இந்த துப்புரவு பணிகளின்போது நகர சபையின் கழிவகற்றல் வாகனங்களை தந்துதவிய புத்தளம் நகர சபையின் செயலாளர் எல்.ஜீ.பி. பிரீத்திக்காவுக்கு ஏற்பாட்டு குழுவினர் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

# வாகன விபத்தில் இளைஞன் பலி

(எம்.ரீ.ஆரிப்)

அநுராதபுரம் பரசன்கஸ்வெவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட பண்டுகாபயபுர பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரம்பாவயிதிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று அதே திசையில் பயணித்த எரிபொருள் ஏற்றிச்சென்ற பவுசர் ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் ஓட்டுனர் படுகாயமடைந்தவர் ரம்பாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளார்.இதனையடுத்து பவுசர் வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பேருவளை அப்ரார் கல்வி நிலைய ஏற்பாட்டில்

# புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

(பீ.எம் முக்தார்)

பேருவளை அப்ரார் கல்வி நிலைய ஏற்பாட்டில் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு தமது கல்வியை இடையூறின்றி தொடர்வதற்காக புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று 16ஆம் திகதி திங்கட்கிழமை மாலை பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.



அப்ரார் கல்வி நிலைய ஸ்தாபகரும், முன்னாள் அமைச்சருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பாகிஸ்தான் நாட்டின் இலங்கை உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) பஹீம் அஸீஸ் பிரதம அதிதியாகவும், கட்டார் செரட்டி இலங்கை பணிப்பாளர் முஹம்மத் அபூ கலீபா கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வர் என கல்வி நிலைய செயலாளர் கலாநிதி. மௌலவி எம் அஸ்வர் அஸாஹிம் (அல்-அஸ்ஹரி) தெரிவித்தார்.

பேருவளை மருதானை அல்-பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயம், பாஸியத்துல் நஸ்ரியா ஆண்கள் பாடசாலை, மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயம், மஹகொடை ஐ.எல்.எம் ஸம்ஸுதீன் மகா வித்தியாலயம், மஸ்ஸல பௌத்த கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளில் கல்வி பயிலும் 50 வறிய மாணவர்களுக்கு இதன் போது புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக தலைவர் முஹம்மத் நிஸாம் தெரிவித்தார்.

நிகழ்வில் கல்வி அதிகாரிகள், ஆறு பாடசாலைகளினதும் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், உலமாக்கள், கல்விமான்கள், பாடசாலை சங்க உறுப்பினர்கள், அப்ரார் கல்வி நிலைய முக்கியஸ்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொள்வர்.

பல நாடுகளின் தூதரகங்கள், பரோபகாரிகள், பிரதேச தலைவர்களின் நிதி உதவியுடன் அப்ரார் கல்வி நிலையம் கடந்த 10 வருடங்களாக பிரதேசத்தில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு தமது கல்வியை இடையூறின்றி தொடர புலமைப் பரிசில் வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. அப்ரார் கல்வி நிலையத்தின் மூலம் புலமைப் பரிசில் பெற்று கல்வியை பூர்த்தி செய்து தொழில்களை பெறுபவர்கள் கூட இன்று புலமைப் பரிசில் திட்டத்திற்கு உதவி செய்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# லொறி-மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

## இருவர் பலி; ஒருவர் படுகாயம்

(எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி பாலாவி பிரதான வீதியில் சேத்தாபிள்ளை எனும் இடத்தில் லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்ட போது இருவர் எடுத்து செல்லும் வழியில் உயிர் இழந்ததுடன் மற்றவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது

பாலாவியை நோக்கி பயணித்த லொறியும் நுரைச்சோலையை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியுள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் மூவர் பயணித்துள்ளனர்.

இதில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும் அவர்கள் இருவரும் 27,28 வயதை உடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்ததுடன் மேலதிக விசாரனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தனர்.

# தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் தப்பியோட்டம்

(எம்.ரீ.ஆரிப்)

தலாவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் கைரேகைகளை பெற்றுக் கொள்வதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டு வரப்பட்ட போது பொலிஸிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

தலாவ கம்பிரிகஸ்வெவ பகுதியில் வசிக்கும் 19 வயதுடைய இளைஞனே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 12 ஆம் திகதி வீடொன்றை உடைத்து திருடிய சம்பவம் தொடர்பில் தலாவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் (14 ஆம் திகதி) சனிக்கிழமை தலாவ பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் சந்தேக நபரை பொலிஸ் நிலைய சிறையில் வைத்திருந்த போது பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சந்தேக நபரின் கைரேகைகளை பெற்றுக் கொள்வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்துச் சென்று மீண்டும் பொலிஸ் சிறை அறைக்கு அழைத்துச் செல்லும் போது பொலிஸ் சார்ஜனை தள்ளி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கலாபூஷணம் விருது பெற்றார் கவிஞர் மதிபாலசிங்கம்



(செல்லையா பேரின்பராசா)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் ஈச்சிலம் பற்றினைப் பிறப்பிட மாகவும், மல்லிகைத் தீவினை வாழ்விடமாகவும் கொண்ட கவிஞரும் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ப.மதிபாலசிங்கம் புத்த சாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெற்ற 39 ஆவது கலாபூஷணம் அரச விருது விழாவில் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும் பல்துறைசார்ந்து எழுதிகொண்டிருக்கின்ற ஓர் இலக்கியவியலாளர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ளவெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத ஆயை வரலாற்றைக் கூறும் பத்துப் பாடல்கள் அடங்கிய "வெருகலம்பதி வேலவன் கீதங்கள்" எனும் இறுவட்டை (ஒலிப் பேழையை) வெளியிட்ட பெருமைக்குரியவர்.

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள்,பாரபட்சங்களை

# உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(எம்.என்.எம்.புஹாரி, அப்துல்சலாம் யாசீம்)

மாகாண பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அமைப்பினால் இலங்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்கி, ஏற்றுக் கொண்ட சீடோ சமவாயத்தின் அடிப்படையில் புதிய சட்ட மூலத்தினை கொண்டு வருவதன் ஊடாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும், பாரபட்சங்களையும் நிறுத்த உடன் உதவுமாறு கோரும் கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்து நேற்றுமுன்தினம் (14) ஊடக சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஊடக சந்திப்பில், இலங்கையின் அனைத்துப் பெண்களும் இன, மத, சமூக வேறுபாடுகளைக் கடந்து ஆணாதிக்க அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். ஆணாதிக்க மயப்பட்ட குடும்ப, சமூக, வேலைத்தள, அரச அடக்குமுறைகளுக்கு இலங்கைப் பெண்கள் அனைவருமே உள்ளாகின்றனர்.

இணையவழிக் குற்றங்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் இம்சைகள், வன்முறைகளால் சிறுமிகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எனினும் காத்திரமான சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் தவறு செய்கின்றவர்கள் தப்பித்துக் கொள்கின்ற நிலைதான் தற்போதும் இருக்கின்றது. இருந்த போதும், கடந்த 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ம் திகதி தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 15 வயதுடைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய 41 வயதான நபருக்கு 30 வருட கடூழிய சிறை தண்டனை விதித்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் திருகோணமலை மேல் நீதிமன்றம் கடந்த 11.12.2024 அன்று தீர்ப்பு வழங்கியதை எமது கிழக்கு மாகாண பெண் மனித உரிமை பாதுகாவலர் அமைப்பு வரவேற்கிறது.

இலங்கையில் இடம்பெறுகின்ற பெண்கள் மீதான வன்முறைகளை நிறுத்துவதற்கான சட்டங்களை விரிவுபடுத்துவதுடன், சட்டங்களில் சீர்திருத்தங்களை உடன் மேற்கொண்டுதவுமாறும், அத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்களுக்கு எதிரான எல்லா விதமான பாரபட்சங்களை இல்லாது ஒழிக்கும் (சீடோ) சமவாயத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை முழுமையாக இலங்கையில் நடைமுறைப் படுத்துவதற்காக புதியதொரு சட்ட மூலத்தை உருவாக்குமாறும், இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு இடம்பெறும் விசாரணைகளை உடன் நிறுத்த வேண்டும் எனவும், இலங்கையில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குமாறும், மேலும் அரசுக்கு எதிரான குற்ற செயல்களை கையாள்வதற்கு போதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் பயங்கரவாதத் தடை சட்டத்திற்கு பதிலாக புதிய பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். என குறித்த அமைப்பினர் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.





# வான் குடைசாய்ந்ததில் உயிர்தப்பிய மதபோதகர்கள்

## அக்கரைப்பற்று கூளாவடி சந்தியில் சம்பவம்

திருக்கோவில் கார்த்திகேசு அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கூளாவடி சந்திக்கு அண்மித்த பிரதான வீதியில் நேற்று(15) காலை டொல்பின் ரக வான் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இது, அக்கரைப்பற்று அலிக்கம்பை தேவகிராமத்தில் இருந்து காஞ்சிரங்குடா பிரதேசத்தை நோக்கி பயணித்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. குறித்த வாகனத்தில் பயணித்த தேவகிராமத்தின் பங்குத்தந்தை ஒருவரும் இரு அருட்சகோதரிகளும் எந்தவொரு உயிராபத்துக்களுமில்லாமல் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

அலிக்கம்பை தேவகிராமத்தில் இருந்து திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் இடம்பெறுகின்ற ஆராதனை வழிபாட்டிற்காக சென்று கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனத்தின் குறுக்காக சென்ற மோட்டார் சைக்கிளுக்கு வழிவிட எத்தணித்த நேரம் குறித்த வாகனத்தில் டயர் காற்றிழந்து வெடித்த காரணத்தினால் வான் குடைசாய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கொழும்பு பள்ளிவாசல்கள் சம்மேளனம்

# அட்டாளைச்சேனையில் 85பேருக்கு வெள்ள நிவாரணம் வழங்கிவைப்பு

(எஸ்.எம்.அறூஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் 85 பேருக்கு கொழும்பு பெற்றா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினால் சுமார் 42 இலட்சம் ரூபா நிதி நேற்றுமுன்தினம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை மற்றும் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் வழிகாட்டலில் கொழும்பு பெற்றா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தினால் சேகரிக்கப்பட்ட நிதித் தொகையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளையின் தலைவர் யூ.எல். நியாஸி தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கொழும்பு பெற்றா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி எல்.எம்.லபீர் ஹாமீதி (அல் -ஹாஸிமி) பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் கொழும்பு பெற்றா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் ஏ.எச்.எம்.நஸார், பொருளாளர் எம்.எஸ்.எம்.இஸாம் உள்ளிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். இங்கு பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா வீதம் பணத்தினை நிகழ்வில் கலந்துகொண்டு கொழும்பு பெற்றா பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் அட்டாளைச்சேனைக் கிளையின் முக்கியஸ்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# பாராட்டு விழாக்களில் அதிபர், ஆசிரியர்கள் புறக்கணிப்பு

(முகம்மட் முக்தார்)

கடந்த 2023 ஆம் ஆண்டு க.பொ.த சா.த பரீட்சைப் பெறுபேறுகளின் படி கிழக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்திற்கு முன்னேறி யுள்ளது. இது தொடர்பாக கிழக்கு மாகாண சபையால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாக்களில் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் புறக்கணிக்கப் பட்டுள்ளதாக கிழக்குமாகாண ஆளுநருக்கு முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கச் செயலாளரினால் ஆளுனருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது கடந்த காலங்களில் க.பொ.த (சா.த) பரீட்சை அடைவு மட்டத்தில் பின்னடைந்திருந்த கிழக்கு மாகாணம் கடந்த 2023 ம்ஆண்டு தேசிய மட்டத்தில் 0 2ஆம் இடத்திற்கு முன்னேறியிருந்தது.

இதற்காக கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் சேவை பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதேபோல மாகாணக் கல்வி அமைச்சச் செயலாளரினால் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் சேவை பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இப்பத்திரங்கள் அவர்களது எதிர்கால பதவி உயர்வுக்கு சான்றாக இருக்கும். ஆனால்,இவ்வடைவு மட்ட அதிகரிப்புக்கு பிரதான காரணமாக இருந்த ஆசிரியர்கள், அதிபர்கள் எவரும் இதுவரை கௌரவிக்கப்படவில்லை. அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர்.இவ்வாறான சம்பவங்கள் கடந்த காலங்களிலும் நடைபெற்றது.

பாடசாலை மட்டத்தில் தம்மை வருத்தி அர்ப்பணிப்புடன் அதிபர், ஆசிரியர்கள் கடமை செய்யாதிருந்தால் இவ்வாறான அடைவுமட்ட உயர்வு கிடைத்திருக்குமா என்பதை கிழக்கு மாகாண கல்வி உயரதிகாரிகள் எண்ணிப்பார்க்க மறந்துவிட்டனர். பரீட்சை முடிவுகள் மோசமாக அமைந்துவிட்டால் அதிபர், ஆசிரியர்களை வசைபாடி அவர்களது வருடாந்த சம்பள உயர்ச்சியை கேள்விக்குறியாக்கும் கல்வி நிருவாகிகள் பரீட்சை முடிவுகள் சிறப்பாக அமையும் போது அவர்களை புறந்தள்ளி தமக்கு பாராட்டுக்களை பெற்றுக்கொள்கின்றனர்.இது என்ன நியாயம்??

இவ்வாறான தொடர்புறக்கணிப்புக்கள் அதிபர், ஆசிரியர்களுக்கு ஏற்படுமானால் அது தேசிய மட்டப் பரீட்சைகளில் நிச்சயம் எதிரொலிக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுவர்.

## கௌரவிக்கும் நிகழ்வு





(எஸ். சினீஸ் கான்)

இலங்கை பொதுப் பரீட்சையில் சித்தி பெற்ற ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலிம்கள் அமைப்பினரின் பிள்ளைகளை கௌரவிக்கும் நிகழ்வு அமைப்பின் தலைவர் மௌலவி எச்.எம். ஷாஜஹான் (பலாஹி) தலைமையில் அமைப்பின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் அதிதியாக கலந்துகொண்டதுடன் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கிவைத்தார். காத்தான்குடி ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலிம்கள் பெற்ற நிகழ்வில் சிரேஷ்ட உலமாக்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் பங்கேற்றனர்.

## திருமலை

# ஊடகவியலாளர்களுக்கான தடை நீக்கம்

(கியாஸ் ஷாபி)

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் பங்குபற்றி, செய்தி சேகரிப்பதற்கு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு செய்தி சேகரிப்பதற்கு, 2021 பெப்ரவரி 12 ஆம் திகதி முதல் ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நாயகம் கமல் குணரத்னவினால் வெளியிடப்பட்ட 2/2021 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், நாடாளாவிய ரீதியில், மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இதன் பின்னர் ஆட்சியைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தத் தடையை நீக்கிய போதும், அப்போது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும், மாவட்ட அபிவிருத்தி குழு இணைத் தலைவராகவும் இருந்த ஒருவரால், தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், இது சம்பந்தமாக டிசம்பர் 11ஆம் திகதி திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு, புதிய அரசாங்கத்தின் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரவுடன், அவரது திருகோணமலை அலுவலகத்தில், கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டது.



இந்த சந்திப்பில், ஊடக மன்றத்தின் தலைவர் அமதுரு அமரஜீவ, பொருளாளர் எஸ். கீதபொன்கலன், அமைப்பாளர் ஒலுமுதீன் கியாஸ் ஷாபி, நிர்வாகக் குழு உறுப்பினர் எம். எச். யூஸூப் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, இந்த தடையை நீக்கி , ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக் கடிதம் ஒன்று, பிரதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இதன் பயனாக, தடையை நீக்கி ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிக்க வாய்ப்பளிக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபருக்கு, பிரதி அமைச்சர் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

சுமார் ஐந்து வருடங்களுக்குப் பின்னர், தற்போது புதிய அரசாங்கத்தின் கீழ், மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் கலந்து கொண்டு, செய்தி அறிக்கையிடுவதற்கான வாய்ப்பு மீண்டும் ஊடகவியலாளர்களுக்கு கிடைத்துள்ளது.இதற்காக, பிரதி அமைச்சருக்கு, திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் அமதுரு அமரஜீவ நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# புலனாய்வு அறிக்கையிடல் தொடர்பான செயலமர்வு

அகம் மனிதாபிமான வள நிலையம் ஏற்பாட்டில் நடைபெற்ற, கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான புலனாய்வு அறிக்கையிடல் தொடர்பான செயலமர்வு நேற்று (15) திருகோணமலையிலுள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதன்போது புலனாய்வு அறிக்கையிடல் என்றால் என்ன?, புலனாய்வு அறிக்கையிடல் செய்வதற்கு எவ்வாறு தகவல் சேகரிப்பது? எவ்வாறு நடு நிலைமையாக அறிக்கையிடல் செய்வது? உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக விளக்கங்கள் வழங்கப்பட்டன.



இச் செயலமர்வில் திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 15க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.



2024-2025ஆம் ஆண்டிற்கான வரலாற்று சிறப்புமிக்க சிவனொளிபாதமலையின் பருவ காலம் நேற்று முன்தினம் (14) ஆரம்பமானது. பெல்மடுல்ல கல்பொத்தாவெல ரஜமஹா விகாரையில் இருந்து இரத்தினபுரி அவிசாவளை, ஹட்டன் வீதி, பலாங்கொட பொகவந்தலாவ வீதி ஊடாக, இரத்தினபுரி பாலபத்தல, ரஜமாவத்தை ஆகிய பகுதிகளுக்கு காலை கரடுவ, சமன் தேவர் சிலை, உடைகள் மற்றும் ஆபரணங்கள் சிவனொளிபாதமலையின் முற்றத்தில் வைக்கப்பட்டதையடுத்து பருவகாலம் ஆரம்பமானது.

படங்கள் : பொகவந்தலாவ நிருபர்

# பொலிஸில் முறைப்பாடுகள் செய்யும் போது பாரபட்சம்

## மக்கள் புகாரளிப்பதாக வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



பொலிஸார் சில இடங்களில் முறைப்பாடுகளைச் செய்வதற்குச் செல்லும் பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்பதில்லை என எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன. இத்தகைய பாரபட்சங்கள் இல்லாதொழிக்கப்படுவது மனித உரிமைகளை நிலைநாட்ட உதவும் என வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளையின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தின நிகழ்வு ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது.

பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அவர்,

எமது சமூகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். எமது அரச அலுவலகங்களை அவர்கள் இலகுவாக அணுகுவதற்கான வழிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

யாழ். மாவட்டச் செயலராக இருந்தபோது மாற்றுத் திறனாளிகள் அணுகுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தேன்.

மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் கூடுதல் கரிசனையுடன் நாம் செயல்பட வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில், மாற்றாற்றலுடையோரை ஆட்சேர்ப்புக்கான வழிகாட்டுதல் – பரிந்துரைகள் அடங்கிய ஆவணம், ஆளுநரிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளரால் கையளிக்கப்பட்டது.

# இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 2624 ஏக்கர் நிலம் விடுவிக்கப்படும்

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்



யாழ். மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் 2,624 ஏக்கர் நிலப்பரப்பு எதிர்வரும் காலங்களில் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரியவருவதாவது, தற்போது படையினரிடம் உள்ள காணிகள் 2025ஆம் ஆண்டு முதல் படிப்படியாக விடுவிக்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்காக இந்த வருடம் 1303.42 மில்லியன் ரூபா நிதி செலவழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அல் இக்பாலில் சாதனையாளர் கௌரவிப்பு



கி.வசந்தன்

வவுனியா, அல் இக்பால் மகா வித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் எம்.எம்.அன்பாஸ் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் குறித்த பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்கள், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாகாணம், மாவட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் சாதனைகளை நிலைநிறுத்திய மாணவர்கள் என 77 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

# சமூக அக்கறையுள்ள இளையோருக்கு ம.மக்கள் அபிவிருத்தி முன்னணி அழைப்பு



2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மலையக மக்கள் அபிவிருத்தி முன்னணியின் சார்பாகத் தனித்துப் போட்டியிட நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சமூக அக்கறை கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு ம.ம.அ.மு இன் பொதுச் செயலாளர் யுவராஜ் சர்மா அழைப்பு விடுத்துள்ளார்.

காலம் காலமாகப் பரம்பரை கட்சிகளும், அரசியல் வாரிசுகளும் நமக்குக் கொடுத்துவந்த கவர்ச்சிகரமான பொய் வாக்குறுதிகளை இம்முறையாவது புறக்கணித்து இவர்களுக்கு ஒரு பாடம் புகட்டும் முகமாக இந்த தேர்தல் களம் காண உள்ளோம் என்றார்.

மேலும் அவர் குற்றியதாவது,

தற்போதுள்ள அரசாங்கம் மலையக மக்களுக்கான அபிலாசைகளை நிறைவேற்ற எந்த ஒரு திட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை.

மலையக மக்களின் வலி, வேதனைகளைத் தெரிந்த எம் இளைஞர், யுவதிகளே எமக்கு அரசியலுக்கு வேண்டும்.

அதைப் போல் எமது ஒட்டு மொத்த மக்களின் சுயமரியாதையைக் கெடுக்கும் முகமாகத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சண்டை இடவும் பொது மேடைகளில் ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொள்ளுவதுமான அரசியலை ஒரு புறம் தள்ளி வைத்து விட்டு, மலையக மக்கள் அபிவிருத்தி முன்னணியானது ஒரு புதிய தேசிய கட்சியுடன் இணைந்து எதிர்வரும் தேர்தல்களில் களம் இறங்கவுள்ளது.

# அருட்தந்தை லூக் மீது தாக்குதல்

கி.வஷந்தன்

கிளிநொச்சியில் நத்தார் இன்னிசை வழிபாட்டுக்குப் பயணித்துக் கொண்டிருந்த மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை.ம.லூக், நேற்று முன்தினம் மாலை வழி மறிக் கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி முறி கண்டியைச் சேர்ந்த தன்னை சுயாதீன ஊடகவியலாளர் என அழைத்துக் கொள்ளும் நபர் ஒருவரே இத்தாக்குதலை நடத்தி அருட் தந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்ய முயன்றதாகவும் இத் தாக்குதல் தொடர்பாகக் கிளிநொச்சி பொலிஸில் அருட் தந்தையினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம்

பொகவந்தலாவ நிருபர்

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் நேற்றுக் காலை பெண்ணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கி இருப்பதை அவதானித்த பிரதேச மக்கள் நீர்த்தேக்கத்தின் பாதுகாப்பு பிரிவு மற்றும் தலவாக்கலை பொலிசாருக்கு தகவல் அளித்துள்ளனர். அதனைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டெடுத்துள்ளதுடன் சடலம் ஒரு பெண்ணுடையது என அடையாளம் காணப்பட்டுள்ள அதே வேளை சடலம் தொடர்பான வேறு எந்த தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக தலவாக்கலை பொலிசார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

நீதவான் விசாரணையின் பின்னர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குச் சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கலகெதர நகரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



எம்.ஏ.அமீனுல்லா

வன விலங்குகளால் ஏற்படும் சேதத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென வலியுறுத்தி நேற்று (15) கண்டி, கலகெதர நகரில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

கலகெதர தும்பனை பிரதேசத்தின் பெரும்பான்மையான மக்கள் சிறு ஏற்றுமதி பயிர்களான சாதிக்காய், கராம்பு, வெற்றிலை, ஏலக்காய், மிளகு போன்றவற்றையும் மற்றும் மா, பப்பாசி , ரம்புட்டான், மங்குஸ்தான், மாதுளை, தோடை, வாழை, பலா, தென்னை, பனை மரவள்ளிக்கிழங்கு உட்பட மரக்கறிகளையும் உற்பத்தி செய்து வருவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போது வரை விவசாயத்தையே பிரதான வாழ்வாதாரமாக நம்பி அதனை பராமரித்து வந்தாலும் பாரியளவில் நடைபெற்று வரும் குரங்குகளின் அச்சுறுத்தல் காரணமாக இந்த விவசாய நிலங்கள் அனைத்தும் முற்றாக அழிந்து பாலைவனமாகி விட்டன.

தற்போது கால்நடைகளின் தொல்லையால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, விவசாயம் செய்ய முடியாமல் தேங்காய், மாம்பழம், பப்பாசி போன்ற பழவகைகளை ஒருநாளும் இல்லாதவாறு சந்தையில் வாங்க வேண்டியுள்ளது. அதுமட்டுமல்லாமல், வீடுகள் மற்றும் பிற சொத்துக்களுக்கும் பெரும் சேதம் விளைவிப்பதாகவும் குழந்தைகளையும் பெண்களையும் கடிப்பதாகவும் அவர்கள் கூறுகிறார்கள்.

விவசாய திணைக்களம் உட்பட அனைத்துப் பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனங்களுக்கும் முறைப்பாடு செய்தும் இதுவரை முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதேவேளை, குறைந்த பட்சம் விவசாய உத்தியோகத்தர் ஒருவர் கூட தமது வயல்களுக்குச் செல்லவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.

அச்சுறுத்தலை ஓரளவு கட்டுப்படுத்த துப்பாக்கிகளை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.



மத்திய மாகாண சபை செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பல் மருத்துவ விசேட சேவை சனிக்கிழமை பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண சபை வளாகத்தில் நடைபெற்றது.

படம் : கண்டி நிருபர்

# தற்கொலைக்கு முயன்ற பெண்ணால் பரபரப்பு

பு.கஜிந்தன்

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் – தொட்டிலடி பகுதியில் நேற்று இளம் பெண்ணொருவர் தனது கழுத்தினை தானே கூரிய ஆயுதத்தால் வெட்டி கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் குறித்த பெண்ணின் கழுத்தில் காயம் ஏற்பட்ட நிலையில் சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அராலி பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரே இவ்வாறு தனது கழுத்தியை தானே காயப்படுத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண் மனநலம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார் என அறியமுடிகிறது. மானிப்பாய் பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 18,000 இந்தியர்களை வெளியேற்ற அமெரிக்க அரசாங்கம் முடிவு



அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்க உள்ள நிலையில் முறையான ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக அந்நாட்டில் குடியேறியவர்களை வெளியேற்றுவதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் 18,000 இந்தியர்கள் உட்பட 15 இலட்சம் பேர் இடம்பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் சமீபத்தில் நடந்த தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றார். அடுத்த மாதம் 20இல் பதவியேற்க உள்ள நிலையில் அந்நாட்டின் வளர்ச்சியை முன்னிறுத்தி பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க டிரம்ப் முடிவு செய்துள்ளார். இதன் ஒரு பகுதியாக அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் திருப்பி அனுப்பப்படுவர் என டிரம்ப் சமீபத்தில் அறிவித்திருந்தார்.

அமெரிக்காவின் குடியேற்றம் மற்றும் சுங்க அமுலாக்கத்துறை சார்பில் முறையான ஆவணங்கள் இன்றி அமெரிக்க நாட்டில் தங்கி உள்ளவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 15 இலட்சம் பேர் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியது தெரியவந்துள்ளது. இதில் அமெரிக்காவின் அண்டை நாடுகளான மெக்சிகோ, எல் சால்வடார் ஆகியவற்றுக்கு அடுத்ததாக இந்தியாவில் இருந்து மட்டுமே ஏழு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அந்நாட்டில் சட்டவிரோதமாக குடியேறியதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கான புள்ளி விபரங்களை அமெரிக்க குடியேற்ற மற்றும் சுங்க அமுலாக்கத்துறை கடந்த மாதம் வெளியிட்டது.

இதன்படி வெளியேற்றும் நடவடிக்கையில் அதிகபட்சமாக அமெரிக்காவின் அண்டை நாடான ஹோண்ட்ராசை சேர்ந்த 261,651 பேர் உள்ளனர். இந்த பட்டியலில் 18,000 இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்களை அவரவர் சொந்த நாடுகளுக்கு தனி விமானம் வாயிலாக அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில நாடுகள் ஒத்துழைக்காததால் சட்டவிரோதமாக குடியேறியவர்களை அவர்களின் சொந்த நாடுகளுக்கு அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனவும் அமெரிக்க குடியேற்றத்துறை தெரிவித்துள்ளது.




# இந்தியாவிலிருந்து ஜெமேக்காவுக்கு 60 தொன் நிவாரணப்பொருட்கள்

கரீபியன் கடல் பகுதியில் உள்ள தீவு நாடான ஜெமேக்காவிற்கு இந்தியா



சார்பில் சுமார் 60 தொன் அளவிலான மருத்துவ மற்றும் பேரிடர் கால பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஜமைக் காவின் மருத்துவ சேவையை பூர்த்தி செய்யவும் பேரிடர் காலங்களில் உதவுவதற்காகவும் மனிதநேய அடிப்ப டையில் இந்தியா சார்பில் இந்த பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் சனிக்கிழமை(14) அவரது எக்ஸ் சமூக வலைதளத்தில் ஜெமேக்கா நாட்டின் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யவும் அந்நாட்டின் மருத்துவ கட்டமை ப்பை வலுப்படுத்தவும் மேலும் சூறாவளி போன்ற பேரிடர் காலங்களில் உதவுவதற்காக வும் அவசரகால மருத்துவ உபகரணங்கள் ஜெனரேட்டர்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட 60 தொன் நிவாரணப் பொருட்கள் மனிதாபிமான அடிப்படையில் இந்தியா சார்பில் ஜமைக்காவிற்கு அனுப்பப்படுகின்றன என தெரிவித்தார். பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஜமைக்கா நாட்டு பிரதமர் ஆண்டிரியூ ஹோல்னஸ் இந்தியாவிற்கு முதல் முறையாக கடந்த செப்டம்பர் 30 முதல் அக்டோபர் 03 வரை சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவக் கற்கைக்கான அனுமதியில் கர்நாடகா முதலிடம்

இளங்கலை மருத்துவக் கற்கையான எம்.பி.பி.எஸ். இற்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கையில் முதல் இடத்தில் இருந்த தமிழகம், 3ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. முதல் இடத்தை கர்நாடகா பிடித்துள்ளது.



இளங்கலை மருத்துவக் கற்கைக்காக ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்படும் மாணவர் எண்ணிக்கையினை மத்திய அரசு அதிகரித்துள்ளது.

அதன்படி 2023-2024ம் கல்வி ஆண்டில் 1,08,940 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், 2024-2025ம் கல்வி ஆண்டில் 118,137 ஆக அனுமதிக்கப்படும் மாணவர்கள் எண்ணிக்கையானது உயர்த்தப்பட்டுள்ளது. இந்த தகவலை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை இணை அமைச்சர் அனுப்ரியா படேல் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இதில் 60,422 மாணவர் வெற்றிடங்கள் அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், 57,715 மாணவர் வெற்றிடங்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும் இடம்பெற்றுள்ளன. அதிக இளங்கலை மருத்துவ படிப்பிற்காக அனுமதிக்கப்படும் மாணவர்களைக் கொண்ட மாநிலங்கள் பின்வருமாறு தரவரிசைப்படுத் தப்பட்டுள்ளன.

கர்நாடகா – 12,545, உத்தரபிரதேசம் – 12,425, தமிழகம் – 12,050, மஹாராஷ்டிரா – 11,845, தெலுங்கானா – 9,040, குஜராத் – 7,250, ராஜஸ்தான் – 6,475, ஆந்திரபிரதேசம் – 6,785, மேற்குவங்கம் – 5,475, கேரளா – 4,905 போன்ற மாநிலங்களிற்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மருத்துவக் கற்கைக்காக அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கையில் கடந்த 2023-2024ம் கல்வி ஆண்டில் முதல் இடத்தில் இருந்த தமிழகம் தற்போது 3ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கேரளாவில் விபத்து 4 பேர் உயிரிழப்பு

கேரளாவில் கார் மீது பஸ் மோதி விபத்து ஏற்பட்டதில், புதுமண தம்பதிகள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

கேரளா மாநிலம், பத்தனம்திட்டா பகுதியில் சபரிமலை பக்தர்கள் சென்ற பஸ் மற்றும் கார் மோதி விபத்து ஏற்பட்டது. இதில், குடும்பத்துடன் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த புதுமண தம்பதிகள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.



தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் காருக்குள் சிக்கியிருந்த 4 பேரையும் மீட்டனர். அவர்களது உடல் பிரேத பரிசோதனைக்காக, மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பொலிஸாரின் விசாரணையில் புதுமண தம்பதிகள் மலேசியாவுக்கு குடும்பத்துடன் சுற்றுலா சென்று விட்டு, வீடு திரும்பும் போது விபத்து ஏற்பட்டது என தெரியவந்துள்ளது.

வாகன சாரதி தூ ங்கியமையே விபத்துக்கு காரணம் என பொலிஸ ார் தெரிவித்தனர். தமிழகத்தில் இருந்து சபரிமலை பக்தர்கள் சென்ற பஸ்சில் பயணம் செய்த சிலர் மற்றும் வாகன சாரதிக்கு லேசான காயம் ஏற்பட்டது. விபத்து குறித்து பொலிஸார்; விசாரித்து வருகின்றனர்.

# தண்ணீர்த் தொட்டி இடிந்து வீழ்ந்து மாணவர்கள் உயிரிழப்பு

அருணாச்சல பிரதேச மாநிலத்திலுள்ள ஒரு பாடசாலையில் மேல்நிலை தண்ணீர் தொட்டி இடிந்து விழுந்து 3 மாணவர்கள் உயிரிழந்தனர்.

அருணாச்சல பிரதேச மாநிலம் நாகரலகூன் பகுதியில் உள்ள கிராமத்தில் செயின்ட் அல்போன்சா பாடசாலை வளாகத்தில் அமைந்திருந்த மேல்நிலை தண்ணீர்த் தொட்டி திடீரென இடிந்து விழுந்தது. அந்த விபத்தில் அங்கு விளையாடிய 6 மாணவர்கள் சிக்கி படுகாயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு அருகிலுள்ள



வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதில் சிகிச்சை பலனின்றி 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மாவட்ட பொலிஸ் அதிகாரி மிஹின் காம்போ தெரிவித்தார். இறந்த அனைவரும் 9ம் வகுப்பு மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தாவில் இளம் பெண் கொலை

## சந்தேகநபர் கைது

மைத்துனரின் காதல் கோரிக்கையை நிராகரித்ததால், கொல்கத்தாவில் இளம் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு உடல் துண்டுத் துண்டாக வெட்டி வீசப்பட்ட சம்பம் பதிவாகியுள்ளது.

கொல்கத்தாவின் ரீஜண்ட் பார்க்கிங் பகுதியில் உள்ள குப்பைக் கிடங்கில் இருந்து வெள்ளிக்கிழமை(10) காலை, மோப்ப நாய்கள் உடல் உறுப்புகளைக் கண்டெடுத்தன.

உடல் உறுப்புகள் பொலித் தீன் பையில் கட்டப்பட்டு வீசப்பட்டி ருந்தன. அதைப் பார்த்த அப்பகுதி மக்கள் உடனடியாக பொலி ஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், விசாரணையின் பின்னர் பெண்ணின் உடல் பாகங்களை மீட்டுள்ளனர். இந்நிலையில், கொலை செய்யப்பட்ட பெண்ணின் மைத்துனர் ரஹ்மான் லஷ்கர் (35) குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

சந்தேகநபருடன் அந்த பெண் கட்டிட வேலைக்கு சென்று வந்துள்ளார். இதன் போது தனது நீண்ட நாள் காதல் கோரிக்கையை நிராகரித்தமை காரணமாகவே இந்த கொலையை செய்ததாக அவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கொல்லப்பட்ட பெண் தனது கணவரை பிரிந்து இரண்டு வருடங்கள் ஆகிறது. மைத்துனரின் காதல் கோரிக்கைக்கு பின்னர், அந்தப் பெண் அவரைப் புறக்கணிக்கத் தொடங்கியுள்ளார்.

இவை தனக்கு கோபத்தை ஏற்படுத்தியதாகவும், இதனால் பெண்ணை கொலை செய்ததாக சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

# போதைப்பொருள் கடத்தலில் பாக். ஆளில்லா விமானம்

எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் சனிக்கிழமை(14) இரவு பாகிஸ்தான் ஆளில்லா விமானத்தை சுட்டு வீழ்த்தி, ஜம்மு காஷ்மீர் மாநிலம் அர்னியா செக்டரில் சர்வதேச எல்லையில் இருந்து போதைப் பொருள் கடத்தும் முயற்சியை முறியடித்ததாகக் தெரிவித்தனர்.

அதிகாரிகளின் கூற்றுப்படி, ட்ரோன் இரவு 8.10 மணியளவில் எல்லைக்கு அப்பால் இருந்து இந்தியப் பகுதிக்கு பறந்தது. அதில் 495 கிராம் போதைப்பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

"எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களின் இடைவிடாத அர்ப்பணிப்பு மற்றும் கூர்மையான விழிப்புணர்வு தேச விரோத சக்திகளின் மோசமான வடிவமைப்பை மீண்டும் தோற்கடித்துள்ளது. தேசத்தின் பாதுகாப்பிற்கான அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைக் காட்டுகிறது" என எல்லைப் பாதுகாப்புப் படை ஊடகப்பேச்சாளர் எக்ஸ் சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிமுக பொதுக்குழு கூட்டம்; 26 தீர்மானங்கள் நிறைவேற்றம்

அதிமுக அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில், ஏற்கனவே செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட 9 தீர்மானங்களுடன் சேர்த்து மொத்தம் 26 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஃபெஞ்சல் புயல் காலத்தில் சரியான நடவடிக்கை எடுக்காத திமுக அரசை கண்டித்தல், சட்டம் ஒழுங்கு சீர்கேடு மற்றும் அதிக வரிவிதிப்பை எதிர்த்து தீர்மானம், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிய திமுக அரசை கண்டி த்தல், டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை தடுக்க தவறிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு கண்டனம், திருக்குறளை தேசிய நூ லாக அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்தல், மத்திய அரசு இயற்றும் சட்டங்களுக்கு ஹிந்தி பெயரிடுவதை தவிர்த்து ஆங்கில பெயர்கள் வழங்க வலியுறுத்தல், ஃபார்முலா 4 பந்தயம் மற்றும் பேனா நினைவுச் சின்ன திட்டங்களுக்கு நிதி வீணடிப்பதை கண்டித்தல், குடிமராமத்து திட்டங்களை தொடர முடியாத திமுக அரசை கண்டித்தல், கோதாவரி–காவிரி, பரம்பிக்குளம்–ஆழியாறு, பாண்டியாறு–புன்னம்புழா திட்டங்களை நிறைவேற்ற தவறியதற்கான கண்டனம், நீட் தேர்வு இரத்து குறித்து மக்களிடம் தவறான தரப்புகளை உருவாக்கியதற்கு திமுக அரசை எதிர்த்து தீர்மானம், வாக்காளர் பட்டியலில் உள்ள தவறுகளை சரிசெய்ய இந்திய தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தல், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த திமுக அரசை வற்பு றுத்தல், இஸ்லாமிய சிறைக்கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்காத திமுக அரசுக்கு கண்டனம், கல்வியை மாநில பட்டியலில் மீண்டும் சேர்க்க மத்திய அரசை வலியுறுத்தல், தமிழ நாட்டிற்கான நிதி பகிர்வில் சமநிலையை நிலைநாட்ட மத்திய அரசை வற்புறுத்தல் போன்ற முக்கிய தீர்மானங்கள் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டன.



அத்துடன் அதிமுக பொதுக்குழு, 2026 சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடி கே. பழனிசாமியை மீண்டும் தமிழக முதல்வராகக் காண விரும்புவதாக உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.




# இஸ்ரேல் தாக்குதலை நியாயப்படுத்த முடியாது; அகமது அல்-ஷரா



தங்களது நாட்டில் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதை இனியும் நியாயப்படுத்த முடியாது என சிரியாவில் அல்–ஆஸாத் தலைமையிலான ஆட்சியை கவிழ்த்துள்ள ஹயாத் தஹ்ரீர் அல்–ஷாம் (HTS) கிளர்ச்சி படையின் தலைவர் அகமது அல்–ஷரா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சிரியா தொலைக்காட்சி செய்தியில் அளித்த பேட்டியில் சிரியாவில் அண்மைக்காலமாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல் அனைத்து வரம்புகளையும் மீறிவிட்டது. அந்த நடவடிக்கைகள் பிராந்தியத்தில் தேவையற்ற பதற்றத்தை தூண்டுகின்றன. எனவே சிரியாவில் இஸ்ரேல் இனிமேலும் தாக்குதல் நடத்துவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது என தெரிவித்தார். இஸ்ரேலின் பெயரை குறிப்பிடாமல் தங்களால் அந்த நாட்டுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்பதை உணர்த்தும் வகையில் "யூத நாட்டின் மீது எனது தலைமையிலான படைகள் தாக்குதல் நடத்தாது" என அந்த போட்டியில் அல்–ஷரா தெரிவித்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பித்த சிரியா உள்நாட்டு போரில் ரஷ்யா மற்றும் ஈரான் உதவியுடன் நாட்டின் மிகப் பெரும்பான்மையான பகுதிகளை அல்–ஆஸாத் தலைமையிலான இராணுவம் மீட்டது. பின்னர் கிளர்ச்சியாளர்களுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து நீண்ட காலமாகவே உள்நாட்டு போர் தேக்கமடைந்திருந்தது.

இந்த நிலையில், அரசு படைகளுக்கு எதிராக கிளர்ச்சி படையினர் கடந்த மாத இறுதியில் திடீரென தாக்குதல் நடாத்தி மிகவேகமாக முன்னேறி தலைநகர் டமாஸ்களை அவர்கள் கடந்த ஞாயிறு கைப்பற்றினர்.

ஆட்சியை இழந்த அல்–ஆஸாத் தனது குடும்பத்தினருடன் ரஷ்யா தப்பிச் சென்றார். அல்–ஆஸாத் அரசு அகற்றப்பட்டதற்கு பிறகு சிரியாவில் கோலன் குன்றுகள் பகுதியானது படைகள் இல்லாத பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்க பட்டிருந்த பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியது.

அத்துடன் சிரியா அரசு படைகளின் நிலைகள் மீது மிகத் தீவிரமாக வான்வழி தாக்குதல் நடத்திய இஸ்ரேல் அந்த நாட்டின் ஏவுகணைகள், போர் விமானங்கள், இராணுவ ஹெலிகாப்டர்கள், ரேடார்கள், பீரங்கிகள், போர் விமானதளங்கள் ஆகியவற்றை அழித்தது. அத்துடன் மினா அல்–பாய்தா, லடாகியா ஆகிய இரு கடற்படை தளங்களில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி அங்கிருந்த போர்க்கப்பல்களை சேதப்படுத்தியது.

சிரியாவை கைப்பற்றி இருக்கும் மதவாத படையினருக்கு அந்த ஆயுத தளபாடங்கள் கிடைத்து அதன் மூலம் தங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை முன்கூட்டியே தடுப்பதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக இஸ்ரேல் கூறிவருகிறது. இந்த நிலையில் தங்கள் மீது தாக்குதல் நடத்துவதை இனியும் நியாயப்படுத்த முடியாது என கிளர்ச்சி படைத்தலைவர் அல்–ஷரா தற்போது தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்தில் குண்டு வெடிப்பு; மூவர் பலி, 50 பேர் படுகாயம்



தாய்லாந்தின் தக் மாகாணம் உம்பாங் நகரில் நடைபெற்ற வருடாந்த திருவிழாவில் கலந்துகொண்ட இரு தரப்பினரிடையே ஏற்பட்ட கைகலப்பில் கோபமடைந்த சிலர் அந்தக் கூட்டத்தை நோக்கி வெடிகுண்டுகளை வீசினார்கள். இந்த குண்டுவெடிப்பில் மூன்று பேர் உடல் சிதறி பலியாகினர். 50 இற்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது.

மீட்பு படையினர் அவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அவர்களில் பலர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. இதனை அடுத்து பலியானவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் பெடோங்டார்ன் ஷினவத்ரா தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். இதற்கு இடையே இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் 2 பேரை கைது செய்து விசாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிரிய கிளர்ச்சியாளர்களுடன் நேரடி தொடர்பில் அமெரிக்க அதிகாரிகள்;

## ஆண்டனி பிளிங்கன் தெரிவிப்பு

ஆஸாத் ஆட்சியைக் கவிழ்த்த பின்னர், இப்போது சிரியாவைக் கட்டுப்படுத்தும் எச்.டி.எஸ் கிளர்ச்சியாளர்களுடன் அமெரிக்கா "நேரடி தொடர்பை" ஏற்படுத்தியுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தற்போதும் பயங்கரவாத அமைப்பாகக் குறிப்பிடும் ஹயாத் தஹ்ரிர் அல்–ஷாம் உடனான நேரடி அமெரிக்கத் தொடர்பினை மேற்கொண்ட முதல் அங்கீகாரம் இதுவாகும். சிரியாவின் எதிர்காலம் குறித்து விவாதிக்க பல அரபு நாடுகள், துருக்கி மற்றும் ஐரோப்பாவின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையிலேயே பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

பிராந்திய சக்திகள் "குழப்பத்தில் இறங்குவதை" பார்க்க விரும்பவில்லை என்று ஜோர்டானின் வெளியுறவு அமைச்சர் குறிப்பிட்டதுடன், நாட்டில் ஒரு அமைதியான மாற்றம் , செயல்முறைக்கு ஆதரவளிக்க அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். சிறுபான்மையினரின் உரிமைகளை மதிக்கும் மற்றும் "பயங்கரவாத குழுக்களுக்கு" ஒரு தளத்தை வழங்காத ஒரு கூட்டு அறிக்கையை



சமர்ப்பிக்க சிரிய அரசாங்கத்திற்கு இவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

சமீபத்திய வாரங்களின் கொந்தளிப்பான நிகழ்வுகளுக்குப் பிறகு சிரியாவிற்கு உள்ளேயும் வெளியேயும் சிரியர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய நிர்வாகத்தை அமைப்பதில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

ஜோர்டானில் நடைபெற்ற கூட்டத்தில், ஈராக் வெளியுறவு அமைச்சர் ஃபுவாட் ஹுசைன், மத்திய கிழக்கு மற்றும் அதற்கு அப்பால் உள்ள சிரியாவின் எதிர்காலம் குறித்து கவலை தெரிவித்தார். பிராந்திய வீரர்கள் மற்றொரு லிபியாவைப் பார்க்க விரும்பவில்லை என்று அவர் தெரிவித்தார். கேர்னல் கடாபி ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட பின்னர் ஏற்பட்ட குழப்பத்தையே இவர் குறிப்பிடுகிறார்.

தற்போதுள்ள சிரிய நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டு சீர்திருத்தப்பட வேண்டும் என்று துருக்கி வெளியுறவு அமைச்சர் ஹக்கன் ஃபிடன் கூறினார்.

"பயங்கரவாதத்தை மாற்றக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். மேலும் நாம் நமது முயற்சிகளை ஒருங்கிணைத்து கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்" என ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# கிரீஸ் கடலில் படகு கவிழ்ந்து 5 அகதிகள் உயிரிழப்பு; பலர் மாயம்

கிரீஸ் கடல் பகுதியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அகதிகள் 5 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

துருக்கியில் இருந்து இத்தாலி நோக்கி அகதிகள் சென்ற படகு கிரீஸ் கடற்பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. ஏஜியன் கடலில் கார்பதோஸ் தீவு பகுதியில் படகு மூழ்கியது. இது குறித்து தகவல் அறிந்த கடலோர கடற்படையினர் மற்றும் விமானப்படையினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். அந்த படகில் சுமார் 80 பேர் பயணம் செய்த நிலையில், 5 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மேலும் அவர்களில் 29 பேர் மீட்கப்பட்டதாகவும், 50 பேரை காணவில்லை எனவும் கடலோர கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அந்த கடற்பகுதியில் 50 கி.மீ வேகத்தில் காற்று வீசுவதால் மீட்பு பணி சவாலாக உள்ளது எனவும் அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஏராளமான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு குடிபெயர்கின்றனர். அவர்களில் பலர் கிரீஸ் நாட்டையே தேர்ந்தெடுக்கிறார்கள். அதனால் துருக்கி



வழியாக கிரீஸ் நாட்டிற்கு, ஆபத்தான கடல் பயணம் மேற்கொள்ளும் போது அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் மத்திய தரைக்கடல் பகுதியில் 64 பேர், படகு விபத்தில் உயிரிழந்திருப்பதாக சர்வதேச அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது. இதே போல் மைகோனோஸ் தீவில் கடந்த ஜுன் மாதம் படகு கவிழ்ந்ததில் 8 பேர் உயிரிழந்தனர். அதில் 108 பேர் மீட்கப்பட்டதாக ஐ.நா. அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காலிஸ்தானியர்கள் குறித்து இந்திய உளவுத்துறைக்கு தகவலளிக்கும் ரஷ்யா

காலிஸ்தான் ஆதரவாளர்கள் குறித்த தகவல்களை ரஷ்யா இந்திய உளவு அமைப்பான RAW இற்கு வழங்கி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உடன் தொடர்பில் உள்ள ரஷ்ய அமைப்புக்கள் இந்த முக்கிய தகவல்களை பரிமாறுவதாக சீக்கியர்களுக்கான நீதி (SFJ) அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. இந்தியாவால் தடை செய்யப்பட்ட இந்த அமைப்பின் இணை நிறுவனர் குருபத்வந்த் சிங் பன்னுன் காலிஸ்தானுக்கு எதிராக செயல்படுவதாக ரஷ்யாவை எச்சரித்துள்ளார்.



ரஷ்யா ஊடகம் காலிஸ்தான் குறித்த தப்பெண்ணத்தை பரப்புவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கிடையே நியூயோர்க்கில் உள்ள ரஷ்ய தூதரகம் முன் எஸ்.எப்.ஐ உறுப்பினர்கள் போராட்டத்தில் வெள்ளிக்கிழமை ஈடுபட்டுள்ளனர். மேலும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள ரஷ்ய தூ தரகம் முன்னும் ஆர்ப்பாட்டம் நடத்த எஸ்.எப்.ஐ திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக குருபத்வந்த் சிங் பன்னுன் மீதான கொலை முயற்சியில் இந்தியாவை தொடர்புபடுத்தி சர்ச்சை எழுந்ததும், அவர் இந்திய விமானங்களுக்கு அடிக்கடி வெடிகுண்டு மிரட்டல் விடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் பகல் சேமிப்பு நேரத்தை நீக்குவேன்; டொனால்ட் ட்ரம்ப் உறுதி

அமெரிக்கா உள்ளிட்ட பல மேற்கத்தேய நாடுகளில் பகல் சேமிப்பு நேரம் என்ற முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அமெரிக்காவில் பகல் சேமிப்பு நேரமுறையை அகற்றுவேன் என டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

நீண்ட கோடைக்காலங்களில் பகல் நேரத்தினை அதிகரிக்க பகல் சேமிப்பு நேரம் என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது கோடை காலம் ஆரம்பிக்கும் போது கடிகாரங்களில் ஒரு மணி நேரத்தை முன்னோக்கி நகர்த்தி வைப்பர். இதன் மூலம் அதிகமான பகல் நேரம் கிடைக்கும். பின்னர் கோடைக்காலம் முடியும் போது கடிகாரங்களில் ஒரு மணி நேரத்தை பின்னோக்கி நகர்த்தி வைப்பர். இதன்படி அமெரிக்காவில் மார்ச் மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை கடிகாரத்தை ஒரு மணி நேரம் முன்னோக்கி நகர்த்தி வைப்பார்கள். பின்னர் நவம்பர் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று கடிகாரத்தில் ஒரு மணி நேரத்தை பின்னோக்கி நகர்த்தி வைப்பார்கள்.

முதலாம் உலகப்போரின் போது இந்த நடைமுறை உருவானது. பின்னர் இரண்டாம் உலகப்போரில் ஆற்றலை சேமிப்பதற்காக மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 1966 இல் சீரான நேரச் சட்டத்துடன் மேலும் தரப்படுத்தப்பட்டது. அதே சமயம் ஹவாய் மற்றும் அரிசோனாவின் பெரும் பகுதி பகல் சேமிப்பு நேரம் என்ற நடைமுறையை கடைபிடிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த பகல் சேமிப்பு நேர முறைக்கு அமெரிக்காவில் பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். பகல் நேரங்களில் ஏற்படும் நேர மாறுதல்களால் தூக்கம் மற்றும் உடல்நல பிரச்சனைகள் ஏற்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் டிரம்ப் பகல் சேமிப்பு நேர முறையை அகற்றுவேன் என தெரிவித்துள்ளார் . இது தொடர்பாக அவரது




எக்ஸ் சமூக வலைத்தள பதிவில் "குடியரசு கட்சி பகல் சேமிப்பு நேரத்தை அகற்ற சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளும். பகல் சேமிப்பு நேர முறை எமக்கு தேவையில்லை. அது சிரமமானது மற்றும் செலவு மிகுந்தது" என பதிவிட்டுள்ளார்.

### ஏபிசி நியூஸ் மீதான அவதூறு வழக்கு;

# ட்ரம்பிற்கு 15 மில்லியன் டொலர்கள் இழப்பீடு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு 15 மில்லியன் டொலர்களை நட்ட ஈடாக வழங்குமாறு ஏபிசி செய்தி சேவைக்கு அந்நாட்டு நீதிமன்றம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடுத்துள்ள அவதூறு வழக்கில் இரு தரப்புக்கும் இடையில் ஏற்பட்ட தீர்வின் ஒரு பகுதியாக இந்த இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஏபிசி நியூ ஸில் ஒளிபரப்பப்பட்ட அமெரிக்க பிரதிநிதி நான்சி மேஸ் உடனான நேர்காணலில், தொகுப்பாளர் ஜோர்ஜ் ஸ்டெபனோபொலோஸ், டொனால்ட் ட்ரம்ப் "கற்பழிப்புக்கு பொறுப்பு" என்று கூறினார். அவதூறான அறிக்கையை வெளியிட்டு ஒளிபரப்பியதற்காக ஜோர்ஜ் ஸ்டீபனோபௌலோஸ் மற்றும் ஏபிசி நியூஸ் மீது டொனால்ட் ட்ரம்ப் அவதூறு வழக்கு தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

# போட்டியின் போக்கை மாற்றிய டிராவிஸ்–ஸ்மித் ஜோடி



ஆர்.மனோசங்கர்

இந்திய – அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான போர்டர்–கவாஸ்கர் டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியில்



அவுஸ்திரேலியா நல்ல நிலையில் உள்ளது.

அவுஸ்திரேலியான அணியின் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்களான டிராவிஸ் ஹெட் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் ஆகியோர் சதங்களை பூர்த்தி செய்ததுடன், அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கையை சடுதியாக உயர்த்தினர்.

ஸ்டீவ் ஸ்மித் 101 ஓட்டங்களுடனும், ஹெட் 152 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார். இந்தியா சார்பில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்திய ஜஸ்பிரித் பும்ராவைத் தவிர, வேறு யாராலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்க முடியவில்லை.

நிதிஷ் குமார் ரெட்டி ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தார்.

ஒரு கட்டத்தில் 75 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்த நிலையில், ஸ்மித்துடன் இணைந்த டிராவிஸ் ஹெட் இந்தியாவை மீட்டனர்.

இருவரும் இணைந்து போட்டியின் போக்கை மாற்றினர். இறுதியாக, இந்தியாவுக்கு எதிரான நான்கு டெஸ்ட் போட்டியில் டிராவிஸ் ஹெட் தனது மூன்றாவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

எந்த வகையான போட்டியாக இருந்தாலும் டிராவிஸ் ஹெட் இந்தியாவுக்கு தலைவலியாக மாறியுள்ளார். கடந்த காலங்களில் இந்திய அணிக்கு எதிரான டிராவிஸ் ஹெட் அபாரமாக விளையாடி வருகின்றார்.

இந்த டெஸ்ட் போட்டி நடைபெறும் பிரிஸ்பேனில் உள்ள கப்பா கிரிக்கெட் மைதானத்தில் கடைசியாக விளையாடிய மூன்று இன்னிங்ஸிலும் டிராவிஸ் ஹெட் ஓட்டங்கள் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

ஆனால், இந்தியாவுக்கு எதிரான போட்டியில் அவர் சதம் அடித்துள்ளார். 160 பந்துகளை எதிர்கொண்ட அவர் 18 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 152 ஓட்டங்களை குவித்திருந்தார்.

இந்த மைதானத்தில் கடைசியாக தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஒரு போட்டியிலும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டு போட்டிகளிலும், ஓட்டங்கள் எதுவும் பெறாம் டிராவிஸ் ஹெட் ஆட்டமிழந்தார்.

குறிப்பாக இந்த மூன்று போட்டிகளிலும் முதல் பந்திலேயே டிராவிஸ் ஹெட் ஆட்டமிழந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## முன்னாள் உதைப்பந்தாட்ட வீரர் ஜனாதிபதியானார்



ஜோர்ஜியாவின் புதிய ஜனாதிபதியாக முன்னாள் உதைப்பந்தாட்ட வீரர் மைக்கேல் கவெலஷ்விலி சனிக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆளும் ஜாரிஜிய கனவுக் கட்சி, கடந்த அக்டோபரில் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் சனிக்கிழமை நடைபெற்ற வாக்கெடுப்பில் மைக்கேல் கவெலஷ்விலி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸுக்கு இந்திய வீரர் சுமித் தகுதி



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இந்திய வீரர் சுமித் நாகல் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளார்.

ஓர் ஆண்டில் 4 கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர்கள் நடைபெற்றுவரும் நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் ஜனவரி 12ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை இரு வாரங்கள் தொடர்ச்சியாக நடைபெற உள்ளன.

இந்நிலையில் இந்த தொடருக்கு நேரடியாகத் தகுதி பெற்றுள்ள வீரர்களின் பட்டியலை அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கூட்டமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்டது. இதில் ஆடவர் டென்னிஸ் தரவரிசையில் 98–வது இடத்தில் உள்ள இந்திய வீரர் சுமித் நாகல் நேரடியாகத் தகுதிபெற்றுள்ளார். இவர் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பங்கேற்பது இது 5ஆவது முறையாகும்.

## இலங்கைக்கான உதவியை நிறுத்தியது சர்வதேச ஒலிம்பிக்






சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஆசிய ஒலிம்பிக் குழு ஆகியன இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு வழங்கி வந்த நிதியை இடைநிறுத்தியுள்ளன.

எவ்வாறாயினும்,இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு ஒலிம்பிக் புலமைப் பரிசில் நிதி நேரடியாகச் செலுத்தப்படும் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவுக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் விசேட பொதுச் சபைக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (13) நடைபெற்றுள்ளது.இக் கூட்டத்தில் தேசிய ஒலிம்பிக் குழுவின் தேர்தலை விரைவில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும், குழுவின் தற்போதைய பதவிக்காலம் ஏப்ரல் 2026 இல் முடிவடைய உள்ளது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் தேர்தலை விரைவில் நடத்துவதற்கான பிரேரணை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர் தேசிய ஒலிம்பிக் குழுவின் அடுத்த தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னதாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இலங்கை ஒலிம்பிக் குழுவிற்குச் சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஆசிய ஒலிம்பிக் குழு வழங்கிய நிதி கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## ஓய்வு பெற்ற முஹமட் அமீர்

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாகப் பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் முஹமட் அமீர் அறிவித்துள்ளார்.

32 வயதான அவர் ஜூன் 2009 இல் சர்வதேச அரங்கில் அறிமுகமானதிலிருந்து பாகிஸ்தானுக்காக 36 டெஸ்ட், 61 ஒருநாள் மற்றும் 62 ரி20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

அமீர் 271 சர்வதேச விக்கெட்டுகளை வீழ்த்தி 1,179 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.



சகலத்துறை வீரரான இமாத் வாசிம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விலகிய ஒரு நாளுக்குப் பிறகு அமீரின் ஓய்வு அறிவிப்பு வெளியானது. இரு கிரிக்கெட் வீரர்களும் இவ்வாண்டு அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற ரி20 உலகக் கிண்ண போட்டிகளில் விளையாடினர்.

“சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதற்கான கடினமான முடிவை நான் எடுத்துள்ளேன். இந்த முடிவுகள் எளிதானவை அல்ல ஆனால் தவிர்க்க முடியாதவை” என்று அமீர் தனது சமூக ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த தலைமுறையினருக்கு சந்தர்ப்பம் வழங்கி பாகிஸ்தான் கிரிக்கெட்டை புதிய உயர்த்துவதற்கு இதுவே சரியான தருணம் என்று நான் உணர்கிறேன்” என்று அமீர் கூறினார்.

## உலக செஸ் சம்பியன் குகேஷ்: கிடைத்த பரிசுத் தொகை

உலக செஸ் சம்பியன்ஷிப் தொடரில் தமிழக வீரர் குகேஷ் நடப்பு சம்பியன் டிங் லிரெனை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்று இந்தியாவுக்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார். அவர் வென்றுள்ள பரிசுத் தொகை குறித்த தகவல்கள் இணையத்தில் கவனம் பெற்றுள்ளன.



செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் மொத்த பரிசுத் தொகை 2.50 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இதில் குகேஸுக்கு 1.35 மில்லியன் டொலர் வழங்கப்பட்டதன் அடிப்படையில் இந்திய மதிப்பில் அவர் ரூ. 11.45 கோடி ரூபாயை பெறுகிறார். அவரது போட்டியாளரான லிரென் 1.15 மில்லியன் டாலர் என்ற அடிப்படையில் சுமார் 9.75 கோடி ரூபாய் பெற்றுக் கொள்கிறார்.

இதற்கிடையே, ஐபிஎல் ஏலத்தில் எடுக்கப்பட்ட வீரர்களுக்கான தொகையை விடவும், குகேஷின் பரிசுத் தொகை குறைவாக இருப்பதாக இணையத்தில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 16ம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.